விலை 20/-

பொதுசன நூலகம் 28 SEP 2008 யாழ்ப்பாணம் மாநகரசபை

"இதயம் இயங்காவிடின் மனிதம் இயங்க முடியாது"
"உழைப்பவன் இயங்காவிடின் உலகமே இயங்க முடியாது"

# இதயநாதம்

இதயம் : 01 | ஆவணி - 2008 | பக்கங்கள் : 12 | நாதம் : 3

# அரச அதிபர் அறிவித்த கட்டுப்பாட்டு விலைக்கு பொருள்களைப் பெறமுடியுமா?

## பொதுமக்கள் மத்தியில் ஆதங்கம்

**பாழ்ப்பாணத்தில் பொருள்களின் விலை மீண்டும் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் நிலையில் அரச அதிபரினால் அறிவிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைக்குப் பொருள்களை எப்போது பெறலாம் என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.**

### சமூக அறிவியல் களஞ்சியத்திலிருந்து...

மக்கள் தங்களிடம் இனியும் இழப்பதற்கு ஒன்றுமில்லை என்று உணர்ந்து கொதித்தெழும் போதுதான் அவர்கள் நலனுக்காக இறுதி கெடுவைக்கப்படும். மக்களை திசை திருப்பிக்கொள்வதற்கு ஏராளமான அரசாங்கங்கள் அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட தொழிற் சங்கங்களின் முதுகெலும்பை முறிக்க கொடுக்கும் கொஞ்ச நஞ்ச கூலியிலும் மண்ணை அள்ளிப்போட மொத்தத்தில் தன்னுடைய சொந்த குடிமக்கள் மீது அதிகமான கட்டுப்பாட்டை செலுத்தி விட சர்வதேச நிதி நிறுவனத்தின் திட்டங்களை பயன்படுத்திக் கொள்கின்றன.

கடந்த 2006 ஆகஸ்ட் 11இற்குப் பின்னர் இன்று வரைக்கும் குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்கள் தொடங்கி ஏனைய பொருள்கள் வரை விற்பனையில் கட்டுப்பாட்டு விலையை இழந்து விட்டது. வர்த்தகர்கள் பல்வேறு காரணங்களைக்காட்டி அதிகவிலைக்கு விற்பனை செய்து கொண்டே வருகின்றனர். இதனால், சாதாரண வறியமக்கள் தொடர்ந்தும் பாதிப்படைந்து வருகின்றனர். இவ்வாறு கட்டுமீறிச் செல்லும் விற்பனையை கட்டுப்படுத்துவதற்கு யாழ்.அரச அதிபர் வர்த்தகர்ளுக்கு பல தடவைகள் கடுமையான தொனியில் அறிவித்தல் விட்டும் அது பெரிதாக எடுபடாமல் போய்விட்டது. பொருள்களின் விற்பனை விலையை பட்டியலிட்டு பார்வைக்கு வைக்கவேண்டும் என்று கூட அறிவித்தல விடப்பட்டது அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

இதுபோன்று ஒவ்வொரு பொருளும் தட்டுப்பாடும், விலை அதிகரிப்பும் ஏற்படும்போது அரச அதிபரினால் அவ்வப்போது அறிவித்தல்கள் விடப்பட்டது. அரச அதிபர் அறிவித்தபடியால் நாம் பொருள்களை மலிவாக பெறலாம் என்று மக்கள் பெரிதும் சந்தோசப்பட்டனர்.

ஆனால், மக்களின் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் ஏமாற்றமாகி நாளடைவில். அரசாங்க அதிபர் விலைக்கட்டுப்பாட்டை அறிவிக்காமல் விட்டால் பொருள்களின் விலை அதிகரிக்காது. ஏனெனில் அரசாங்க அதிபர் ஒவ்வொரு பொருள்களுக்குமான விலைக்கட்டுப்பாட்டை அறிவித்தகையோடு குறிப்பிட்ட பொருள்களின் விலை சடுதியாக அதிகரித்துச்செல்லும் நிலைதான் யதார்த்தமாகிவிட்டது. உதாரணமாக அண்மைய நாட்களுக்குள். 50 கிலோ எடை கொண்ட சீமேந்தின் விலை1500 ரூபாவுக்கு விற்கவேண்டும் என்று இருதடவைகள் அறிவிக்கப்பட்டது. கடுமையான தொனியில கூட அறிவித்தல் விடப்பட்டது. இருந்தபோதிலும் சீமேந்தின் விலை 2000 ரூபாவைவிட விலை குறையவில்லை. இறுதியாக 1600 ரூபா விலை அறிவிக்கப்பட்டது. இதற்குப்பின் தற்போது சீமேந்தின் விலை 2500ரூபா தொடங்கி 3000 ரூபா வரை உயர்ந்துவிட்டது. இந்நிலை மக்கள் மத்தியில் கேலிக்கிடமான ஒன்றாகிவிட்டதுடன் மக்களின் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் அர்த்த மற்ற ஒன்றாகியதன் விரக்தியின் வெளிப்பாடே மேற்குறித்த கேள்வியின் எதிரொலிப்பாக இருக்கின்றது. என உணர்ந்து கொள்ளமுடியும்.



# இலங்கையின் கல்வியில் ஒடுக்குமுறை பல வடிவங்களில் தொடர்கின்றது

## கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி தனபாலன் கூறுகிறார்

இலங்கையின் கல்வியமைப்பில் இலவசக் கல்வி கொண்டுவரப்பட்டமை பல விருத்திகளை ஏற்படுத்தினாலும் இன்றும் அதன் பிரயோகங்கள் ஏழை வறிய மக்களுக்கு முற்று முழுதாகக் கிடைக்கவில்லை.இவ்வாறு தெரிவித்தார் கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி தனபாலன். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் கல்வி வரலாற்றில் என்றும் இல்லாத அளவு கஷ்டப் பிரதேச, தூரவுள்ள, வறிய மக்கள் வாழ்கின்ற பிரதேசப் பாடசாலைகள் பூட்டப்பட்டு வருகின்றன. 1994 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரை 1062 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

இது குறித்த பிரதேச ஏழை, வறிய ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி உரிமைகளைப் பறிக்கும் செயற்பாடாகும். பல கல்வியியலாளர்களும் ஆயவாளர்களும் இதைத் தெரிந்தும் தெரியாதது போல் உள்ளமை பற்றிய விமர்சனங்கள் அதிகரித்துள்ளன. குறித்த மக்கள் வாழ்கின்ற பாடசாலைகள் மூடப்படுகின்றபோது அங்கு கற்கும் மாணவர்கள் ஏனைய பாடசாலைகளுக்குப் போகாமல் தமது கல்வியை இடைநடுவே விட்டுவிடுகின்றார்கள். அதனால் பெரும்பாலான ஆரம்பக் கல்விப் பாடசாலைகளே மூடப்பட்டுவருகின்றன.

சிறுவர்களின் கல்வி உரிமையை மீறுகின்ற செயற்பாடாக இது உள்ளது. இந்நிலை தொடர்பாக பெரும்பாலான இலங்கையின் அரசியல் கட்சிகள் மௌனப் போக்கையே கடைப்பிடிக்கின்றமையும் மேலும் இடதுசாரிக் கட்சிகள் கூட இவ்விடயம் தொடர்பாக தமது எதிர்ப்புக்களைக் காட்டாதிருப்பதும் அதிர்ச்சி தருவதாக உள்ளது.பாடசாலைகள் பூட்டப்படுகின்றமைக்குக் காரணங்களை வினவியபோது,

(02 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் அதிகார பூர்வ ஏடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதயம் இயங்காவிடின் மனிதம் இயங்க முடியாது"
"உழைப்பவர் இயங்காவிடின் உலகமே இயங்க முடியாது"
# இதயநாதம்

## சிந்தனைக்கு..

அறிவியலின் செங்குத்தான பாதையில் களைப்புக்கு அஞ்சாமல் ஏறுகிறவர்கள் மட்டுமே அதன் ஒளிமயமான சிகரத்தை சென்றடைய முடியும். கார்ல்மார்க்ஸ்

## வறுமையிலும் வறுமை நிவாரணம்

யாழ்.குடாநாட்டில் அரசாங்கத்தின் உதவியாக பல்வேறு நிவரணங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவரணம், உ-காட்டுக்கான கொடுப்பனவு சமுர்த்தி நிவரணம், வறுமையிலும் வறுமை நிவாரணம் என்று பல பெயர்களில் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

தற்போதைய விலைவாசி உயர்வுடன் ஒப்பிடுகையில் மேற்குறித்த கொடுப்பனவு போதாக்குறையாக இருந்தாலும் ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டு நோக்குகையில் எல்லோருக்கும் வழங்கும் நிவாரணத்தில் இடம்பெயர் நிவரணம் பெறுமதியானது. இதற்கு அடுத்தபடியாக வறுமையிலும் வறுமை நிவாரணம் அதிக அளவில் வழங்கப்படுகின்றது. வறிய மக்கள் என்ற அடிப்படையில் வழங்கப்படும் சமுர்த்தி நிவாரணம் போதுமானதாக இல்லை. அத்துடன் தற்போதைய விலைவாசி உயர்வுடன் ஒப்பிடுகையில் மிகவும் பெறுமதி அற்ற ஒன்றாகிவிட்டது.

வறிய மக்களைப்பொறுத்த மட்டில் நாளாந்த தொழில் வாய்ப்பை இழந்து நீண்ட காலமாகிவிட்டது. தற்போதைய விலைவாசி உயர்வு தாக்குப்பிடிக்கமுடியாத நிலையைக் கடந்து ஒருநாளைக்கு ஒரு நேர உணவு உண்பதென்பது கூட கேள்விக் குறியாகிவிட்டது. இந்நிலையில் தமக்கு வறுமையிலும் வறுமைக்கான நிவாரணம் வழங்கப்படாதா அல்லது வழங்கப்படும் சமுர்த்தி நிவாரணமாவது அதிகமாக கூட்டி வழங்கமாட்டார்களா என்று ஏக்கத்துடன் தமக்குள் பேசிக்கொள்கின்றனர். இவர்களின் ஏக்கப்பெருமூச்சிலும் கேள்விக்கணையிலும் நியாயம் இருக்கத்தான் செய்கின்றது. யாழ்.குடாநாட்டில் நீண்ட காலமாக வழங்கப்பட்டுவரும் வறுமையிலும் வறுமைக்கான நிவாரணம் பெரும்பான்மையாக வசதிபடைத்தவர்களுக்கும் நடுத்தர பொருளாதாரத்தை உடையவர்களுக்குமே சென்றடைகின்றது. இதை ஆய்வுசெய்து பார்த்தால் உள்ளூரில் உள்ள பெரிய தொழிலதிபர்கள் ஐரோப்பிய பொருளாதார வசதி உடையவர்களுக்குகூட இந்த வறுமையிலும் வறுமை நிவரணம செல்கின்றமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இத்தகைய நடைமுறை மனிதநேயமுள்ள எந்த சாதாரண மனிதனுக்கும் ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றாகவே இருக்கும். இதைப்பற்றி பாதிக்கப்பட்ட வறியமக்கள் கேட்டால் சமுர்த்தி நிவாரணமானது வறுமையிலும் வறுமை நிவாரணம் தற்காலிகமானது என்று பதிலளிக்கப்படுகின்றது. வறியமக்களின் மனநிலை என்னவாக உள்ளது என்றால் இதைசொல்லியே நீண்ட காலம் கடந்துவிட்டது. இந்தக்காலத்திற்கு எமதுவறுமைக்கும் அவர்களின் வசதிக்கும் இந்த அதிகாரிகளுக்கு வேறுபாடு தெரியாதா? இந்த நிவாரணத்தை உண்மையில் வறுமையிலும் வறுமையானவருக்கு பகிர்ந்தளிக்க வழிபண்ணலாம்தானே? உண்மையான வறுமையிலும் வறுமையானவர்கள் நாம் பட்டினி கிடக்கின்றபோது வசதியானவர்கள் வறுமையிலும் வறுமை நிவாரணத்தை எடுத்து உண்மையில் என்ன செய்கிறார்கள்? தமக்கு மேலதிகம் என்ற நிலையில் கறுப்புச் சந்தைகளுக்கு விற்பனைக்கு விடுகின்றனர் என்று வறியமக்கள் வேதனையில் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றனர். இவர்களின் வேதனைகளை போக்குவதற்கு சம்மந்தப்பட்ட அரச அதிகாரிகள் நல்லதொரு மாற்றுநடவடிக்கையை மேற்கொள்ள முன்வர வேண்டும் என்று உண்மையான வறுமையிலும் வறுமையான மக்கள் சார்பாக இதயநாதம் சுட்டிக்காட்டுகின்றது.



கடந்த 17.07.08 இல் குப்பிளான் தெற்கு புன்னாலைக்கட்டுவன் அறிவொளி ச.ச. நிலையத்தில் அறிவொளி முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழாநடைபெற்றது.

மழலைகளின் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்வினராக கலந்துகொண்ட வலி தெற்கு உடுவில் பிரதேச செயலர் திருமதி சதீசன் மஞ்சுளாதேவி மங்கல விளக்கேற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## இலங்கையின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலக வங்கியின் வினைத்திறனான பாடசாலைகளை இயக்குதல் என்ற கோட்பாட்டிற்கு அமைய உலக வங்கியின் ஆலோசனைப்படியே அரசாங்கம் இவ்வாறு பாடசாலைகளைப் பூட்டுகின்றநிலை தோன்றியுள்ளது. பாடசாலைகள் வர்த்தக நிலையங்கள் அல்ல. கல்வி விற்பனைப் பண்டமும் அல்ல. எதிர்காலப் பிரசைகளான இன்றைய மாணவர்களின் சமூக, கலாசார, பண்பாட்டுத் தொழில் விருத்திகளுடன் நற்பிரசைகளை உருவாக்கும் உயிர்ப்பான அமைப்புகளாகும்.

எனவே, இவ்விடயம் தொடர்பான விழிப்புணர்ச்சியை சமூக மட்டத்தில் ஏற்படுத்த வேணடியிருக்கின்றது. இன்று உலகமயமாதல், வர்த்தக மயமாதல், போட்டிச் சந்தை, மத்திய தர வர்க்கத்தினரின் அபிலாசைகள், நுகர்வுப் பொருளாதார பெருக்கம் என்பவற்றின் தாக்கங்களை ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியல் எதிர்காலவியல் கேள்விக்குறியாகவுள்ள நிலையில் இது தொடர்பான போராட்டங்களை முன்னெடுக்கவேண்டியுள்ளதுடன் எமது சுதேச பொருளாதார-சமூக-கல்வி அடிப்படைகளில் இருந்தே உறுதியான சமூகக் கட்டமைப்பை ஏற்படுத்த முடியும்.தற்போதைய அரசாங்கத்திற்கு இவ்விடயம் தொடர்பான அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இனிப் பாடசாலைகளை மூடுதல் தொடர்பான முடிவுகளை எடுப்பதில்லை எனக் கல்வியமைச்சு கொள்கையளவில் ஏற்றாலும் மூடப்பட்ட தேவையுள்ள பல பாடசாலைகளை மீண்டும் திறக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளபோதும் இது நடைமுறைக்கு வருமா என்பது பெரும் கேள்வியாகவே உள்ளது என்று இதயநாதத்துக்கு தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அணு உடன்படிக்கை

யப்பானில் நடந்து முடிந்த ஜீ-8 மாநாட்டினால் இந்தியாவின் முக்கியத்துவமும் இந்திய இடதுசாரிக்கட்சிகளின் தீவிரமும் மீண்டும் ஒரு தடவை பேசப்படுகின்றதாகியுள்ளது. இந்திய அமெரிக்க சிவில் உடன்பாட்டின் விம்பமான காங்கிரஸ் - இடதுசாரி கூட்டணி ஆட்சி கலைந்துவிட்டது. அமெரிக்காவுடான உடன்படிக்கையே இந்திய ஆட்சிக்குழப்பத்துக்கு காரணம். மன்மோகன்சிங் அரசாங்கத்தின் பொருளாதார சமூக விருத்தித் திட்டங்களுக்கு பெருத்த பின்னடைவை அணு உடன்படிக்கை ஏற்படுத்தியுள்ளது. இவ்வகைக் குழப்பம் அமெரிக்காவுக்கு லாபகரமானது. அணுவாயுத அரசியல் எவ்வகை தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதென்பதனை இக்கட்டுரையூடாக புரிந்து கொள்ள முயல்வோம்.

2005 யூலை 18ம் திகதி மன்மோகன்சிங் - வில்லியம் புஷ் செய்து கொண்ட உடன்படிக்கையே சிவில் அணு உடன்பாடாகும். இதனைத்தொடர்ந்து ஆரம்பகட்டம் பூர்த்தியடைந்ததும் அதன் விருத்தியை இந்திய அரசாங்கத்தரப்பிடம் அமெரிக்கா வழங்கியது. மேலும் 2008 மார்ச்சில் அமெரிக்க ஜனாதிபதி புஷ் புதுடில்லி வருகை தந்தமை அவ்உடன்படிக்கையின் வலிமை அதிகரிக்கத் தொடங்கியது. அணு உடன்படிக்கை பற்றிய விடயம் ஏறக்குறைய 35 க்கும் மேற்பட்ட பந்திகளைக்கொண்டிருந்தது.அதில் ஒரு சில பந்திகளிலேயே அணு விவகாரம் அடங்கியுள்ளது. ஏனையவை அனைத்தும் அமெரிக்க - இந்திய ஒத்துழைப்பே குவிந்துள்ளது.

1955ம் ஆண்டு முதல் அணுமின் நிலையத்தை இந்தியா கொண்டிக்கிறது. 1960ல் அமெரிக்க ஜெனரல் எலக்ரிக் நிறுவனம் தராப்



பூரில் இரண்டு அணுமின் நிலையங்களை அமைத்திருந்தது. கனடாவின் உதவியுடன் இராஜஸ்தானில் ஒரு அணுமின் நிலையம் நிறுவப்பட்டிருந்தது. 1955-1974 க்கும் இடையில் 1120 இந்திய அணு விஞ்ஞானிகள் அமெரிக்காவுக்கும் பிற நாடுகளுக்கும் பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். கூட்டங்குளம் பகுதியில் 06 ரஷ்சியத் தயாரிப்பு அணு உலைகளும் 2 இந்தியத்தயாரிப்பு அணு உலைகளும் நிறுவப்பட்டிருக்கிறது. மொத்த அணு உலைகளில் இந்திய அணுசக்தித்துறை 10% மட்டுமே பூர்த்தி செய்துள்ளது. 90% மானவற்றை நோக்கி இந்தியாவின் அணுசக்தித்துறை செயல்பட்டு வருகிறது.

உலகைப் பொறுத்த வரை 27 நாடுகளில் 260 க்கு மேற்பட்ட அணு உலைகள் இயங்கி வருகின்றன. ஆய்வு நோக்கில் 300 அணு உலைகள் இயங்கிவருகின்றன. இவைகளின் கழிவுகளிலிருந்துதான் அணுகுண்டை தயாரிப்பதற்கான ப்ளுட்டோனியம் பிரித்தெடுக்கப் படுகிறது. மேலும் தற்போது 230 க்கு மேற்பட்ட அணு உலைகளுக்கான கட்டுமானப் பணிகள் நடந்து வருகின்றன. மொத்ததத்தில் 490 உலைகள் தயாராகிக்கொண்டிருக்கின்றன. தற்போது 150,000 கிலோ ப்புளுட்டோனியம் தேக்கிவைக்கப்பட்டிருப்பதுடன் ஆண்டுதோறும் 30000 கிலோவை தேக்கிவைக்கும் வல்லமை உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வருகிறது. 2010 அளவில் 150,000 ஆக ஆண்டுதோறும் தேக்கப்படும் ப்புளுட்டோனியம் அதிகரிக்க வாய்புண்டு என தகவல்கள் தெரிவிக்கின்றன. 2008ல் அமெரிக்காவின் பாதுகாப்புத்துறை 17000 புதிய அணுவாயுத ஏவுகனைகளை உருவாக்கியுள்ளது. இதற்காகவே உலகளாவிய ரீதியில் அணுவாயுதங்களைத் தயாரிக்கும் அணு உலைகளை IAEA இன் மூலம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயல்கின்றது.

உலகம் மிக விரைவாக அழிவடையக்கூடிய ஆயுதங்களை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொள்ள திட்டமிட்டு வருகின்றன. இதற்குள் மன்மோகன்சிங் அரசாங்கம் சிவில் சேவைக்கான அணுவாயுத நடவடிக்கையைப் பயன்படுத்த எடுக்கும் முயற்சி அணுவாயுத பரிசோதனைகளை செய்ய முடியாமலாக்கிவிடும் என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. இடதுசாரிக்கட்சிகளின் அரசியல் அபிலாசையில் ஒன்றாக அணுவாயுதம் மாறிவிட்டதென்ற விளக்கத்தையும் பெறலாம். ஆமெரிக்காவின் அழியாத மாறுதல் என்பது காங்கிரஸக்கோ இந்தியாவுக்கோ புதிதல்ல. ஆனால் இடதுசாரிகளின் சிந்தனையில் அணுவாயுதம் எப்படி மாறிவிட்டதென்பதை புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

**சர்வதேசியன்**

வாசிங்டன் உடன்பாட்டின் கீழ் சிவில் அணுவாயுத முறைமை, இராணுவ அணுவாயுத முறை என்ற வகைப்படுத்தல் IAEA இன் தடைக்கு வலுச்சேர்ப்பதாகவே உள்ளது. இவ் உடன்பாடு பற்றி அமெரிக்கரான சாமுவேல் வரன்ரிடன் கூறும்போது “இது ஒரு சமயோசிதமான ஆரம்பம்தான். ஆனால் அதன் பொதுவிருப்பானது சீனாவுக்கு எதிராக இந்தியாவை நிறுத்துவதற்கான ஏற்பாடாகும் இதனால் பாரிய முரண்பாடு எதிர்காலத்தில் ஏற்படக்கூடியதாகவுள்ளது”. ஆசியாவுக்குள் அமெரிக்காவுக்கான சிறந்த சேவகனாக இந்தியா விளங்குகிறது என்றார். இதற்கு கட்டியம் கூறும் விதத்தில் 2006 மார்ச் 03 இல் செங்கோட்டையில் அமெரிக்க ஜனாதிபதி புஷ்சின் உரையில் தொனித்திருந்தது.

நாம் இரு சுதந்திர நாடுகள். நாம் அமைத்துள்ள கூட்டணி உலகை மாற்றும் வல்லமை கொண்டவை. உலகில் மாபெரும் சக்தியாக விளங்கும் இந்தியாவுக்கு உலகம் முழுவதும் ஜனநாயகத்தை தழைத்தோங்க செய்ய வேண்டிய [illegible] இருக்கிறது. சுதந்திர வேட்கை கொண்ட இவ்வுலகிற்கு இந்தியாவின் தலைமை தேவைப்படுகிறது. மியான்மார், சிரியா, சிம்பாவே, கியூபா முதலான நாடுகளின் மக்கள் தமது சுதந்திரத்தை நாடி நிற்கின்றனர். ஈரானில் பழமையும் பெருமையும் வாய்ந்த மக்கள் மதவெறி கொண்ட ஆளும் கும்பலால் பிணைக்கைதிகள் போன்ற நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். இக்கும்பல் ஈரானிய மக்களின் அடிப்படை உரிமைகளை வழங்க மறுக்கிறது. பயங்கரவாதத்தினை முடுக்கி வருகின்றன.அணுவாயுதங்களை குவிக்க முயலுகின்றன என்றார்.

அமெரிக்க இந்திய நெருக்கம் மிகவும் தெளிவாக விளங்குகிறது. மன்மோகன்சிங் அரசாங்கத்தின் குழப்பம் நீக்கப்பட்டிருந்தாலும் இந்தியாவை ஆபத்தான பாதைக்குள் இழுத்துச் செல்ல அமெரிக்காவுக்கு சந்தர்ப்பம் கிடைத்து விட்டதெனலாம். இதனால் நம்பிக்கையூட்டும் சிந்தனைளைக் கடந்து முரண்பாடும் பகைமையும் நீடிப்பதுடன் ஆசியாவின் 21ம் நூற்றாண்டுக் கனவுக்கு ஆபத்து ஏற்படக்கூடியதாக அமையவுள்ளது. ஏற்கனவே சீனாவுக்கு வழங்கிய அணுவாயுத ஒத்துழைப்பால் ஏற்பட்ட சீன வளர்ச்சியை இந்தியாவுக்கூடாக மோதவிடுதல் என்பதே இதன் மறுபக்க ஒத்திகை ஆகும். சீன- இந்திய போட்டியை மேலும் அதிகரிக்கும் விதத்தில் அமெரிக்க- இந்திய கூட்டு அமையவுள்ளது.

எனவே மன்மோகன்சிங் அரசின் வெற்றியும் சரி தோல்வியும் சரி அமெரிக்காவுக்கு நன்மையானதே. இது ஆசியாவுக்கே அதிக பாதிப்பை எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடியதாக அமையும். இந்தியாவின் வல்லமை சிவில் அணுவாயுதத்தினால் அதிகரிக்கக்கூடியதாக மாறும். அம்மாற்றம் தீவிர அரசியல் பொருளாதார பாய்ச்சலை ஏற்படுத்துவதுடன் இந்தியாவை அமெரிக்கா நோக்கி நகர்த்துவதில் வெற்றியும் காணும்.

இதயநாதம்
சஞ்சிகைக்கான தரமான ஆக்கங்கள்
(கவிதை, சிறுகதை, கட்டுரைகள்),
செய்திகள், புகைப்படங்கள் என்பன
வாசகர்களிடமிருந்து
எதிர்பார்க்கப்படுகின்றன.
வந்துசேரவேண்டிய முகவரி:
***இதயநாதம், சேச்அருகாமை,***
***குப்பிளான் தெற்கு,***
***புன்னாலைக்கட்டுவன்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெளியே வா...

பெண்ணே .:....
கல்யாணக் கனவுகளே உனக்கு வாழ்க்கையல்ல
சீதனம் என்னும் கோட்பாடு உனக்கு தடையல்ல
அடுப்பங்கரைக்கே நீ அர்ப்பணிக்கப்பட்டவளல்ல
ஏழை என்பதால் நீ ஏய்க்கப்படுவதற்கல்ல
மௌனத் திரை போட்டு நீ மறைந்திருக்கும் வரை உன்
நிழல் கூட பூமியில் விழாது புது
புரட்சி செய்து நீ வெளியில் வந்தால்
இந்த உலகம் உனக்கு தூரம் கிடையாது.

-மு.சந்திரகலா



## இயங்கட்டும் உன் இதயம்

மானுடத்தின் வாழ்தலுக்காய்
வாழும் இந்தப் புனிதர்கள்
புதைந்திடவும் நாதியற்று
புசிக்கப்பட்டு போகிறார்கள்

உழைப்பவனே இன்று
உன் கை இயக்கமற்று போகலாம்
வாய் கூட வார்த்தைகளை
மறந்து போகலாம்

ஆனால் உழைப்போடு உறைந்து போன
உன் உயிரும் உடலும் ஒரு நாள்
முறுக்கேறி வலுப்பெறும் அப்போது
அறுந்து தெறிக்கும் ஈனர் தம்
அடக்குமுறை அதுவரை
இயங்கட்டும் உன் இதயம்
உன் இருப்பை உணர்ந்திட

-துர்க்கா

## அம்மா

சுட்டெரிக்கும் அனல் தெறிக்கும்
கொடூர சமூகத்தில்
உனது கருவறையில் எனைச்
சுமந்து பல இன்னல்கள் மத்தியில்
உனது இன்ப துன்பங்கள்
யாவற்றையும் அனுபவித்து
என்னை ஈன்று இதயமதை வருடி
உனது பாச மழையைப் பொழிந்து
தித்திக்கும் செந்தமிழில்
கற்கண்டு சொற் கொண்டு
படிக்க வைத்து என்னை ஒரு
சிறந்த மகனாக வளர்க்கும்
என் அன்பு அம்மா

சண்முகநாதன்-வபுல்
உரும்பிராய் கிழக்கு

## ஒரு பிஞ்சுவின் பிரகடனம்

எனக்கு ஊட்டிப் பார்க்க- உனக்கு
ஆசை தான் அம்மா
வறுமை ஈட்டி தாக்கிய
எலும்புக் கூடான
உன் உடலில் ஓடும்
என்னைத் தீண்டிப் பார்த்த
குருதியையோ நான்
உறிஞ்சிப் பார்ப்பது?
வேண்டாம் அம்மா
உன் மடி மட்டுமே
என் அடையாள அட்டை
நீ ஊட்டும்
பால் மட்டுமே
என் உயிரின் சட்டை
அம்மா நான்
அங்கங்கள் விற்கும்
தங்கத் தீவிலே
சிரிக்கும் டொலர்
உயிர் மட்டும்
ஊசலாடும்
எலும்புக்குச்சி
நாளைய சிவகாசியின்
சின்ன இயந்திரம் நான்.

சிவராசா ரோகினி
இலுப்பையடி முகாம்
நலன்புரி நிலையம்.

## சுரண்டல்

ஓட்டை வீடு
ஒழுகினால் ஒதுங்க இடமில்லை
பாதி இடிந்த மண் சுவர்- அது
கறையான்களின் வதிவிடம்
இப்படி வாழ்கிறான்
பலர் வாழ வீடு கட்டிக் கொடுத்த
ஏழை கட்டிடத் தொழிலாளி
ஒரு பருக்கை நெல் இல்லை
ஒன்பது பிள்ளைகளும்
பட்டினியாய் பல நாட்கள்
இப்படி வாழ்கிறான்
குத்தகைக்கு வயல் எடுத்து
நெல் விதைத்து அறுவடை செய்த
ஏழை விவசாயி
இவர்கள் இரத்தத்தை
வியர்வையாய் சிந்தி
உழைத்த பணத்தில்
தினமும் அறுசுவை உணவு உண்டு
ஏப்பம் விடும் முதலாளி வர்க்கம்
இன்னும் இனியும் முதலாளிவர்க்கத்தின்
சுரண்டல் வாழ்வதால்
தன் வியர்வைக்கு சரியான கூலி
கிடைக்காத தொழிலாளி வாழ்கிறான்
அதனால் என்றும் வாழும்
வறுமை எனும் பிணி

மானியூர் நிரோஜன்

## உயர்வுக்கு வழி

வியர்வை சிந்தி எனக்கு மட்டுமல்ல
ஊருக்கும் உணவளித்த என்
வயதான தந்தைக்கு ஒரு நேர
உணவளிக்க நான் கற்ற கல்வி
வேலை தரவில்லை
கற்ற கல்வி எனை வாழ வைக்குமென
படித்துப் பட்டம் பெற்றேன்
பின்புதான் புரிந்தது
கொடி பிடித்து
கோசம் போட்டால் மட்டுமே
வேலை என்று
வேண்டாம் உத்தியோகம்
வியர்வை சொட்ட
வெயிலில் நின்று
வயலில் உழைத்தால்
உயர்வோம் என்று
வயலில் வியர்வை சிந்த
மனம் இருந்தும்
வாய்ப்பில்லை வாழ்க்கைக்கு
கேள்விக்குறிதான்
மிச்சமாய் உண்டு
கேள்விக் குறிகள் உடைந்திடும்
நாள் தான் எப்போது?...?

த.வனஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெயில் வரைந்த சித்திரங்கள்

**கடந்த 20-07-08 ஞாயிற்றுக்கிழமை மு.ப.9-30 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகு நடத்திவரும் திரைப்படக் காட்சித் தொடர்-9 இல் இடம்பெற்ற வெயில் திரைப்படம் குறித்த ஒரு விமர்சனப் பார்வை.**





படம் : வெயில்
இயக்குனர் : பு.வசந்தபாலன்
தயாரிப்பு : இயக்குனர் சங்கர்
இசை : G.V. பிரகாஸ்
நடிகர்கள் : பசுபதி, பரத், பாவனா, ஸ்ரேயாரெட்டி,
இயக்குனர் :G.M. குமார்
வெளிவந்த ஆண்டு : 2006

தமிழ் சினிமாவின் மரபிலிருந்து சற்று மாறுபட்டதும் தமிழ் திரைப்படப் பார்வையாளர்களின் மனதில் ஏற்கனவே படிந்து போயிருக்கும் கதாநாயக பிம்பத்தை போட்டுடைத்தும் நம்பகத்தன்மையுடன் இப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

வெயில் வசந்தபாலனுக்கு இரண்டாவது படம். இப்படத்தின் கதைக்களம் இந்தியாவின் விருதுநகர் சேரிப்புறம். வெயிலின் தகிப்பு நிறைந்த சேரிப்புற வாழ்கை இயக்குனர் வசந்தபாலனுக்கு மிகவும் நெருக்கமானது. அவரின் சுய வாழ்க்கைசார் அனுபவக்கூறுகள் படத்தில் உள்ளன. இப்படத்தின் முக்கியத்துவத்துக்கு நான்கு காரணங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

1. படத்தின் மையக்கருவான கதையும் கதாபாத்திரங்களும்
2. கதையை படமாக்கிய விதம்
3. மிகைப்படுத்தப்படாத நடிப்பு
4. புதிய அழகியலை உருவாக்குவதற்கான முயற்சி

கதை இரண்டு அண்ணன் தம்பிகளுக்கிடையிலான பாசமும் அன்பும் பற்றியது என்று தோன்றினாலும் அதைத்தாண்டிய பல்வேறு தளங்களையும் கொண்டிருக்கிறது. கதாநாயகன் சிறு வயது முதல் நடுவயதில் இறக்கும் வரை வாழ்வில் தொடர் தோல்விகளையும் இழப்புக்களையும் சந்தித்தவன். அசல் சேரிப்புற வாசியாக அவன் சித்தரிக்கப்பட்டுள்ளான். அவ்வாழ்க்கையின் அகவய புறவய அசைவுகளிலும் உணர்வுகளிலும் மிகையற்ற இயல்பு படத்தினை சாதாரண தமிழ் சினிமாவிலிருந்து மாறுபடுத்துகிறது.

குடும்பம் அன்பால் மட்டும் உருவானது அல்ல. அது குழந்தைகளின் உடலில் மனதில் ஆறாத வடுக்களை உருவாக்கி வைத்திருக்கிறது. காரணமற்ற வெறுப்பிற்கு உள்ளாகாத குழந்தைகளே இல்லை என்பதைப் படம் சொல்கிறது. இறைச்சிக்கடை நடத்தும் முருகேசனின் அப்பா தனது பிள்ளைகளை கையாளும் விதமும் அதன் காரணமாக முருகேசன் அடையும் அவமானமும் அனைவரின் பால்யத்துக்கும் நெருக்கமானது.

தோற்றுப்போய் வெறுமையாய் திரும்பிய கதாநாயகனை வெற்றியின் சிகரமாகிய தம்பி தழுவிக்கொள்வதும் தோல்வியின் ரணங்களுடன் பரிதவிக்கும் பசுபதி-பாண்டியம்மாள் காதலும் படத்தின் பரவசமிக்க தருணங்கள். விளிம்பு நிலைவாசிகள் ரொட்டிக்காக மாத்திரமின்றி வாழ்வின் எளிமையான வசீகரமான தருணங்களில் பூக்கும் ரோஜாக்களை யாசித்தும் போராடுகின்றனர் என்பதை சேரிப்புறபின்புலத்தில் அடித்தட்டு மக்களின் ஏக்கங்களாகவும் நிராசைகளாகவும் போராட்டங்களாகவும் அழகியலுணர்வுடன் நெறியாளர் சித்தரித்திருக்கிறார்.

படத்தில் வன்முறையின் குரூரங்களை நெறியாளர் கையாளுவதில்தான் தடம் மாறியுள்ளார். தமிழ் திரைப்படங்களில் எமக்குப் பழகிய மிகையுணர்ச்சிகளையும் காணக் கிடைக்கிறது. முழுக்குடும்பத்திற்காகவும் கதாநாயகன் இறுதியில் தியாகம் செய்வதும் அவ்வகை சார்ந்ததே.

எனினும் ஒரு திரைப்படம் உண்மைக்கு மிக நெருக்கமாக இருக்கும்போது அது நம்மோடு நெருக்கமாகிவிடுவதை உணரமுடிகிறது.

**நன்றி : எஸ். ராமகிரிஸ்ணன்**
**தொகுப்பு : நமன்**

# பருநிலைப் பொருளாதாரத்தில் கிராமிய உற்பத்தித்துறை

**(முதலாவது இதழின் தொடர்ச்சி)**

**வீ.பீ.சிவனாதன்**
*விரிவுரையாளர், பொருளியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்*

பருநிலைப் பொருளாதாரக் கொள்கையில் உள்ளடக்கப்படாமலும் பருநிலைப்பொருளாதார அமுலாக்கல் திட்டங்களில் ஒன்றிணைக்கப்படாததுமான வடகிழக்கின் கிராமங்களும் அதைஅண்டி வாழும் மக்களும் பயன்படுத்தப்படாதவிடத்து நாட்டின் உற்பத்தி எவ்வாறு உச்சமடைய முடியும் என்ற கேள்வி எல்லோரிடமும் உண்டு.

உண்மையில் எங்கள் கிராமங்களில் பயன்படுத்தப்படாமல் இருக்கும் மனித மூலதனங்களையும் நிலத்தினையும் பயன்படுத்தக்கூடியதான திட்டத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டியது இக்காலத்தேவையாகும். தொழிலாளரைச் சுரண்டும் நிறுவனங்களுக்கு எதிராக போராடவேண்டிய நகரமக்கள் ஒருபுறமும் வேலைவேண்டும் என்று போராடும் கிராமிய மக்களும் அடிப்படையில் தங்கள் வாழ்க்கைத் தரத்தை பாதுகாக்கப்போராடுபவர்களாகவே உள்ளனர். இவர்களுக்கு நல்லவழி பிறக்க எவ்வகை நிறுவனங்கள் உதவவேண்டும் என்பதே இன்றைய பிரச்சனை. அவ்வாறு நோக்கின்,

1. கடன் வழங்கும் நிறுவனங்கள் வேண்டும்
2. சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் வேண்டும்
3. மனித மூலதனத்தை உருவாக்கும் கல்வி நிறுவனங்களும் பயிற்சி வழங்கும் நிறுவனங்களும் வேண்டும்
4. ஆரோக்கியமாக வாழ்வதற்கான சுகாதார நிறுவனங்கள் வேண்டும்

இந்நிறுவனங்களை தோற்றுவிப்பதும் இயங்கவைப்பதும் அரசின் தலையாய கடமையாகும் மக்களே தங்களது சேமிப்பிலிருந்து முதலீட்டை திரட்டி சாத்தியமானவற்றில் முதலிடவேண்டும் என்பதற்காக வறுமையொழிப்பு என்ற குறிக்கோளினூடாக சமுர்த்தித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இன்று கிராமங்களில் அச்சமுர்த்தித்திட்டத்தின் இலக்குகள் அடையப்பட்டனவா என்பது கேள்விக்குரியதே. சமுர்த்திப் பயனாளிகள் மேலும் வறியவர்களாக இருக்கின்ற செய்திகளே வருகின்றது. wfp உதவியும் கிடைக்காமல் சமுர்த்தியாலும் அதிக பயனை பெறமுடியாத ஏழைகளையே பார்க்கிறோம். மறுபுறம் சிறுகச் சிறுகச் சேமித்த சமுர்த்திச் சேமிப்பு மீண்டும் கடனாக வழங்கப்பட்டு முதலிடப்படாமல் வங்கிகளிலேயே வைப்புச் செய்யப்படுகின்றது. உண்மையில் சமுர்த்திக்கடன் வழங்கலூடாக மீண்டும் முதலீட்டை ஊக்குவித்து அதனூடாக உற்பத்தியை பெருக்கி குடும்ப வருமானத்தை உயர்த்தவேண்டியதே இன்றைய தேவை. ஆனால், சமுர்த்திவங்கி தேசிய சேமிப்புவங்கியில் வைப்புச்செய்து வட்டி உழைக்கவே பார்க்கிறது இது என்தளவுக்கு குறிக்கோளை அடையவைக்கும் இதில் மாற்றங்கள் அவசியம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சார்க் உச்சி மாநாடு; ஓர் மீள்பார்வை

சார்க் அமைப்பின 15 வது உச்சி மாநாடு பெரும் ஆரவாரத்துடன் முன்னெடுக்கப்பட்டு ஒருவாறு முடிந்துவிட்டது. இலங்கை மக்களின் வரிப்பணம் 280 கோடி ரூபா வரை அரசாங்கத்தினால் செலவிடப்பட்டது போக ஒரு வாரம் தலைநகர் முடக்கப்பட்டதனால் மேலும்பல கோடி ரூபா நட்டம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. சுருக்கமாகக் கூறின் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக முடக்கப்பட்டு ஒரு மாநாடு நடாத்தி முடிக்கப்பட்டது எனலாம்.

மாநாட்டுக்கு வருகை தந்ததலைவர்கள் ஒரு முக்கியமான பிராந்தியத்தின் பொதுவான பிரச்சினைகளை நன்கு விவாதித்து தீர்க்கமான முடிவுகளை எடுக்க வந்தவர்கள் போல் தெரியவில்லை. மாறாக ஓய்வு எடுப்பதற்காக தமது பரிவாரங்களுடன் சுற்றுலா ஒன்றிற்கு வந்தவர்கள்போலவே தென்பட்டனர். மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் மேம்போக்கான வகையிலேயே நிறைவேற்றப்பட்டன. கறார் தன்மை அவற்றில் சிறிதளவு கூட காணப்படவில்லை.

மாநாட்டில் பேசிய முக்கிய தலைவர்கள் அனைவரும் பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்பதற்கு முன்னுரிமை கொடுத்தே உரையாற்றியிருந்தனர். ஆனால், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் பலவற்ரோடு ஒன்றாகத்தான் இதுவும் நிறைவேற்றப்பட்டதே தவிர பெரிய முக்கித்துவம் எதுவும் அதற்கு கொடுக்கப்படவில்லை. பயங்கரவாத ஒழிப்பினை நடைமுறையில் மேற்கொள்வது கடினம் என அவர்கள் கருதியிருக்கலாம். ஏனெனில், பயங்கரவாத குற்றச்சாட்டு தொடர்பாக எந்த நாடுமே சுத்தமான கைகளைக் கொண்டிருக்கவில்லை. வாழ நாளில் எந்தவித பாவமும் செய்யாதவர்கள் மட்டும் கல்லெறியுங்கள்" என்ற ஜேசுநாதரின் வாக்கினை இங்கு பொருத்திப்பார்த்தால் எந்த நாடுமே விதிவிலக்காக இருக்கப்போவதில்லை

இந்தியா, பாகிஸ்த்தான், நேபாளம் என்பன சக நாடுகளில் நடைபெறும் வன்முறைகளுக்கு குற்றம் சாட்டப்படுவது எல்லோரும் அறிந்த. ஒன்றே! உள்நாட்டில் மேற்கெள்ளப்படும் அரச பயங்கரவாதம் என்ற பிரச்சனையை எடுத்தால் பெரிய நாடுகள் மட்டுமல்ல சிறிய நாடுகளான இலங்கை, மாலைதீவு, பூட்டான் கூட அவற்றில் உள்ளடங்க வேண்டிய நிலை ஏற்படும்.அரச பயங்கரவாதம் பற்றி எதுவும் பேசப்படாதது குறித்து சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் விசனம் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புத் தொடாபாக பெரிய ஆரவ்ாரம் காட்டப்பட்டபோதும் இந்திய தேசியபாதுகாப்பு ஆலோசகர் நாராயணன் தொடர்பாக பாதுகாப்புத்தரப்பு கோட்டை விட்டுள்ளது. முக்கிய பாதுகாப்புக்குரிய ஒருவர் மாநாட்டு மண்டபத்திலிருந்து தனது தங்குமிடத்திற்கு வாடகைக் காரில் செல்லவேண்டிய துரதிஸ்டம் ஏற்பட்டது. இது தற்செயலானதா அல்லது வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டதா? ஏன்ற விவாதம் ஆய்வாளர்கள் மத்தியில் இன்னமும் முற்றுப்பெறவில்லை. இவர் மட்டுமல்ல மன்மோகன் சிங் அலரி மாளிகைக்கு சென்ற விடயத்திலும் கூட பாதுகாப்புத் தவறு இடம்பெற்றிருக்கிறது.

இந்தியா மாநாட்டிற்கு வருகை தந்தபோது நான்கு பெரிய கனவுகளுடனேயே வருகை தந்திருந்தது. கொழும்பில் தனது படை வலிமையினைக் காட்டுதல், கச்சதீவு தொடர்பாக மீள உடன்படிக்கை ஒன்றினைச் செய்தல், சீபா வர்த்தக உடன்படிக்கையை கைச்சாத்திடுதல், இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வின் தேவையினை பிரச்சாரப்படுத்துதல் என்பனவே அந் நான்குமாகும். அவை எவையுமே நிறைவேறவில்லை.

புலிகள் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தினை அறிவித்ததுடன் இந்தியாவின் முதலாவது கனவு மாநாடு ஆரம்பிப்பதற்கு முன்னரே பிசுபிசுத்துப்போனது. படைகள் சிறிய அளவு வருகை தந்தபோதும் கடலில் கப்பல்கள் நின்றபோதும் அவை பெரிய அளவிற்கு எடுபடவில்லை. சீதுவையில் ஐந்து பாடசாலைகளில் இந்தியப்படைகள் தங்க வைக்கப்பட்டிருந்ததாக ஜே.வி.பி.யினர் பாராளுமன்றத்தில் கூறியுள்ளனர்.

இரண்டாவது கனவினைப்பொறுத்தவரை பாகிஸ்த்தான் இலங்கையுடனான பாதுகாப்பு உடன்படிக்கையின் நகலை இலங்கையரசிடம், ஜனாதிபதியை இந்தியப் பிரதமர் மன்மோகன் சந்திப்பதற்கு முன்னரே கையளித்திருந்ததால் இந்தியப்பிரதமர் அதுபற்றி வாயேதிறக்கவேயில்லை.

சீபா வாத்தக உடன்படிக்கைக்கு தென் இலங்கையில் தீவிர எதிர்ப்பு இருந்ததினால் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திட முன்வரவில்லை. இந்திய அதிகாரிகள் எவ்வளவோ முயன்றும்கூட வெற்றி கிடைக்கவில்லை.

நான்காவது கனவுக்கான சூழல் முற்றிலுமே இல்லாததினால் நாகரீகமாக இந்தியப் பிரதமரே அதுபற்றி உரையாற்றுவதை தவிர்த்திருந்தார். தீவிரமாக இல்லாவிட்டாலும் ஒரு மரபுக்கு மேற்குலகம் கூறுவதுபோல யுத்ததினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. பேச்சுவார்த்தை முன்னேடுக்கப்படவேண்டும் என்ற ஒப்புசார வார்த்தைகளை கூறுவதற்கு இந்தியப்பிரதமருக்கு துணிவு வரவில்லை. இறுதியில் பார்வையாளராக வருகை தந்த அமெரிக்க வெளியுறவு உதவிச்செயலாளரே அதனைக் கூறவேண்டியதாக இருந்தது.

மொத்தத்தில் வெறுங்கையுடன் திரும்பினான் இலங்கை வேந்தன் என்பதற்கிணங்க வெறுங்கையுடன் மட்டுமல்ல பாதுகாப்பு அவமானததையும் சுமந்துகொண்டே திரும்பி செல்ல வேண்டியநிலை இந்தியப்பிரதமருக்கு ஏற்பட்டது.

சார்க் மாநாட்டு தீமானங்களைப் பொறுத்தவரைநான்கு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டதோடு 22 அம்சங்களை உள்ளடக்கி கொழும்புப் பிரகடனமும் வெளியிடப்பட்டது.

சார்க் அபிவிருத்தி நிதியத்தை உருவாக்கும் ஒப்பந்தம், தெற்காசிய வலயங்களுக்கிடையிலான திறன் அமைப்பினை உருவாக்கும் ஒப்பந்தம், குற்றச்செயல்கள் தொடர்பான பரஸ்பர சட்ட உதவி ஒப்பந்தம், ஆப்கானிஸ்த்தானுடன் தெற்காசிய வர்த்தக உடன்படிக்கை ஒப்பந்தம் என்பனவே அவ் நான்கு ஒப்பந்தங்களுமாகும்.

**சி.அ.யோதிலிங்கம்**
*சட்டத்தரணி*

இவற்றில் குற்றச்செயல்கள் தொடர்பான பரஸ்பர சட்ட உதவி ஒப்பந்தம் பற்றி முக்கியமானதாகப் பேசப்பட்டாலும் இவற்றை மேவியிருப்பதனால் அவை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறைவென்றே கூறவேண்டும். இந்தியாவில் குற்றச்செயல்களுக்கு உடந்தையாக இருக்கும் பாகிஸ்த்தான் உளவுப்பிரிவும், அசாம் கிளர்ச்சிக்குழுக்களுக்கு உதவும் பங்களாதேசும் இது விடயத்தில் பெரியளவிற்கு ஒத்துழைக்குமென கூறிவிட முடியாது. அரசியல் பிரச்சனைகளை அரசியல் செயற்பாடுகள் மூலம் தீர்க்கலாமே ஒழிய சட்ட ஒப்பந்தங்கள்மூலம் தீர்க்கமுடியாது.

.22 அம்சங்கள் அடங்கிய கொழும்புப் பிரகடனத்தில் பிராந்திய ஒத்துழைப்பு, தெற்காசிய மக்களுக்கிடையிலான வளர்ச்சி, இணைப்பு, எரிபொருள், சுற்றாடல், நீர்வளம், வறுமை ஒழிப்பு, சார்க் அபிவிருத்தி நிதியம், போக்குவரத்து, தகவல் தொடர்பு தொழில்நுட்ப அபிவிருத்தி, விஞ்ஞானத்தொழில் நுட்பம், சுற்றுலாத்துறை, கலாச்சாரம், சப்டா வர்த்தக உடன்படிக்கை, பெண்கள் மற்றும் சிறுவர்கள், கல்வி, பயங்கரவாத ஒழிப்பு உட்பட 22அம்சங்கள் அடங்கிருந்தன.

இவை வெறுமனவே கொள்கைத் திட்டங்களாக இருந்தனவே தவிர நடைமுறை செயற்பாட்டுக்குரிய பொறிமுறையைக் கொண்டவையாக இருக்கவில்லை. இது போன்ற விடயங்களை உள்ளடக்கிய பிரகடனம் முன்னரும் வெளியிடப்பட்டிருந்தன. ஆனால், நடைமுறையில் பெரிதாக எவையும் இடம்பெறவில்லை.

இப்போது எழும் பிரதான கேள்வி சார்க் அமைப்பு அதன் நோக்கங்களில் ஏன் வெற்றி பெறவில்லை என்பதாகும். தென்னாசியப் பிராந்தியத்தில் ஒரு பிராந்திய அமைப்பின் தேவை அவசியமாக இருந்தபோதும் அதனை எல்லா நாடுகளும் உணர்கின்றபோதும் ஏன் வெற்றியளிக்கவில்லை என்பதாகும். ஐரோப்பிய யூனியன் அளவுக்கு இல்லாவிட்டாலும் கூட ஆசியான் அமைப்பு, ஆபிரிக்க ஒன்றியம் என்பவற்றின் அளவுக்குக்கூட சார்க்கினால் வெற்றிபெற முடியவில்லை என்பதே உண்மை நிலையாகும்.

இதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் பிரதான காரணம்

(11ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 ஆம் நூற்றாண்டின் அரசியல், பொருளாதாரம்

(கடந்த இதழின் தொடர்ச்சி)

**- K.T கணேசலிங்கம் -**
அரசறிவியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

சந்தைப் பொருளாதாரம் என்பது இயங்கியல் சமூகத்தின் ஒரு காலகட்ட மாதிரியாகும். மனித சமூகம் தனது வளர்ச்சிக்கட்டத்தில் உற்பத்தியின் அபரியையும் அதனால் அடையவுள்ள இலாபத்தையும் ஒன்று சேர வைத்ததே சந்தையாகும். இது ஒருவகை சமூகத்தின் தோற்றமாகக்கூட அடையாளப்படுத்தப்பட்டதனால் அதனை ஒரு சாரார் மிக நீண்ட காலமாக தமக்குரியதாக பயன்படுத்தி வந்தனர். அதாவது முதலாளித்துவத்தின் மிக சிறந்த இலாப சுரண்டல் மாதிரி சந்தை என்பதோடு சந்தை சார்ந்த ஒரு பிரிவின் தோற்றம் உற்பத்தியாளரை விட முதன்மையாளராக மாற்றியது. அது நிரந்தரமான அரசியல் மாதிரியையும் பொருளாதார, இராணுவ, கலாசார மாதிரிகளையும் தனக்குரித்துடையதாக அடையாளப்படுத்திக் கொண்டது. இதனால் முதலாளித்துவத்தின் ஒரு பிரசவமாக சந்தை பார்க்கப்பட்டது.

இத்தகைய பார்வை கடந்த நூற்றாண்டின் முன்னரைப்பகுதியுடன் முடிவுக்கு வந்துள்ளது. கார்ல் மார்க்ஸின் கருத்தியலை நடைமுறைப் படுத்த முயன்ற ரஷியர்களிடம் சந்தை பற்றிய உரையாடல் சோஸலிஸத்துக்குரியதாகவும் கருதப்பட்டது. அதிலும் லெனினுக்குப் பின்பு சோவியத் ரஷ்யாவின் ஆட்சியாளனாக எழுச்சி பெற்ற ஸ்ராலினுக்கும் ரொகஸிகிக்குமான முரணபாடு சந்தைப்பொருளாதாரம் பற்றியதாகவே அமைந்திருந்தது. ரொக்ஸ்சியின் சந்தைப் பொறிமுறை பற்றிய சிந்தனை தோற்றுப் போனதுடன் அவரது மரணம் அதுபற்றிய உரையாடலை தற்காலிகமாக ஒத்திப்போட வைத்தது. ஆனால் மீளவும் சீன சோஸலிஷ்டுக்களினதும் டொங்-சியாவோ-பிங்ன் எழுச்சி அதற்கு வலுக்கொடுக்க அதனைப் பின்பற்றிய சோவியத்யுனியனின் இறுதி ஜனாதிபதி மிகையில் கொர்பச்சோவும் அவரை அடியொற்றிய சோஸலிஸ முகாமும் சந்தைப்பொருளாதாரத்தை சோஸலிஸ அரசுகளும் அடியொற்றி ஆரம்பித்தன.

இதனால் இன்று உலகம் தழுவிய ஒரு பொறிமுறையாக சந்தைப்பொருளாதாரம் மாறிவிட்டது. முதலாளித்துவ சோஸலிஸ அடையாளத்தில் ஒன்றாக திட்டமிடல் விளங்குவது போல் சந்தைப் பொருளாதாரம் உருப்பெற்று விட்டது. இதனால் சோஸலிஸ நாடுகளில் இதற்கு முன்பு சந்தை அமைப்பு இல்லையென்றோ சந்தை இல்லையென்றோ யாரும் கருதிவிடமுடியாது. மனித சமூகத்தின் பரிமாணத்தில் சந்தை அமைப்பு தனித்துவமான பொறிமுறையாகவே உள்ளது. அவ்வகை சந்தை அமைப்பில் நுகர்வோனுக்கு அதிக உரிமையும் மதிப்பும் உண்டு. எது தேவை எது உற்பத்தி செய்யப்படவேண்டும் எதை வாங்கவேண்டும் என்பதையெல்லாம் நுகர்வோன் நிர்ணயிப்பான். முதலாளித்துவ சந்தையில் தொழிலதிபர்களும் அதன் இயந்திரங்களின் பங்குமே நிர்ணயிக்கும். இதனையே பொருளாதார ஜனநாயகம் என்கிறார்கள்.

ஆனால், இருபத்தியோராம் நூற்றாண்டுச் சந்தை மேற்குறித்த எல்லா சந்தை அமைப்பையும் தகர்த்துவிட்டு ஏமாற்றுத்தனமான சந்தை அமைப்பை கட்டி வளர்த்து வருகிறது. இது விளம்பரத்தை தனது வலது கரமாகக் கொண்டு இயங்குகிறது. அதிலும் இலத்திரனியல் விளம்பர சாதனங்களின் வருகை நம்பமுடியாத உண்மைகளை காட்டுவது போல் விளம்பரப்படுத்தலை முதன்மைப்படுத்துகின்றது. அப்பொருளின் நிஜவடிவத்தினால் சுயத்தை இழந்து போன சமூகங்கள் ஆயிரமாயிரமாகவுள்ளது. எம்மவர் மத்தியில் புறொயிலர் கோழியும் மெழுமெழுவென துலங்கும் கத்தரிக்காயும் மஞ்சள் மாம்பழங்களும் தரும் ஏமாற்றம் தான் எது?. மிக மலிந்து போன ஏமாற்றுத்தனத்தின் ஒன்று இரண்டு எச்சங்கள். இவை உலக சந்தையில் எப்படி அமையும். அதிலும் வளர்ந்த வறிய சமூகத்தளத்தில் ஏமாற்றின் உச்சம் அளவற்றதாக துலங்குகின்றது.

உற்பத்திகள் ஒவ்வொன்றும் நுகர்வோரின் விருப்புரிமை சார்ந்தது என்ற எண்ணப்பாங்கு முடிந்துபோய்விட்டது. உற்பத்தியை நுகர வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அதிகரிக்க ஆரம்பித்துவிட்டது. காரணம் உற்பத்தியின் தன்மை குறைந்துவிட்டது. ஒரு சிலர் மட்டுமே உற்பத்தி செய்ய மீதிப்பேர் நுகர்வை மட்டுமே மேற்கொள்பவர்களாக மாறியிருப்பதுடன் உற்பத்திக்கான வளம் மனித சமூகத்தின் தவறான நடத்தையால் வீணடிக்கப்பட்டுவிட்டது. இதனால் உற்பத்திக்கான பங்கில் அருந்தல் அதிகரித்துவிட்டது. பெற்றோலியம் மட்டுமே அப்படிப்பார்க்கப்பட்ட நிலைமாறி உணவுப்பொருட்கள் அனைத்திற்கும் அருந்தல் ஏற்பட்டுவிட்டது. அரிசி கோதுமை மற்றும் தானியங்கள் மிகப் பிரதான சவாலாகியுள்ளது. இந்த நிலைக்கு சந்தையும் ஒரு காரணமாகவுள்ளது. சந்தை பின்வரும் ஐந்து மாதிரிகளை கொண்டது.

### சுதந்திரமான சந்தை (Free Market)

நுகர்வோனை சார்ந்திருக்கும் மாதிரியாகவே சுதந்திரமான சந்தையுள்ளது. உற்பத்தியாளனும் நுகர்வோனைப்போல் சுதந்திரமுடையவனாகின்றான். அரசின் ஈடுபாடு மிகக் குறைந்தளவில் கானப்படுகின்றது. ஒரு வகையில் கொங் கொங் இந்த மாதிரியையே பின்பற்றி வந்தது.

### சார்பளவான சுதந்திர சந்தை (Relative Free Market)

உற்பத்தியாளனுக்கும் நுகர்வோனுக்கும் சார்பளவான சுதந்திரம் கொடுக்கப்படுகின்றது. மறைமுகமாக அரசின் கரிசனை காணப்படும். உதாரணமாக பிருத்தானியா அமெரிக்கச் சந்தைப் பொருளாதாரத்தைக் குறிப்பிடலாம்.

### சமூக சந்தை (Social Market)

இது சமூகத்துக்கு நன்மை தரக்கூடிய சந்தை சக்திகளை சுதந்திரமாக தொழில்படச் செய்வது. போட்டிச் சந்தையின் அனுகூலங்களை அனுபவிக்கும் ஒரு முறையாகவுள்ளது. முன்னாள் மேற்கு ஜேர்மனியில் இம்முறை அதிகமாகப் பயன்படக்கூடியதாக இருந்தது.

### திட்டமிட்ட சந்தை (Planned Market)

அரசு நிறுவனங்களையும் அமைப்புக்களையும் ஏற்படுத்தி அவற்றின் மூலமாக சந்தையை ஒழுங்குபடுத்துதலாகும். அரசு சந்தையை தீர்மானிப்பதுடன் வளங்களின் ஒதுக்கீடு அபிவிருத்தியை நோக்கி செல்ல உதவுமென கருதுகிறது. ஜப்பான் தென்கொரியா மாதிரிகளைக் குறிப்பிட்டுக் கூறமுடியும்.

### அரசால் வழிநடத்தப்படும் சந்தை (State Market)

அரசுகளின் வழிநடத்தலுக்கூடாக சந்தைகளை உருவாக்கி வருவதுடன் அவற்றை ஊக்குவிக்கவும் சில நடவடிக்கைகளை பின்பற்றி வருகின்றது. பின்தங்கிய நாடுகளின் அரசியல் பொருளாதாரத்தை வளர்த்து எடுப்பதற்கான உக்தியாக விளங்குகின்றது. தாய்லாந்து, மலேசியா போன்ற தென்கிழக்காசிய மாதிரியாகவுள்ளது.

(தொடரும்)

## மக்கள் பார்வையில் இதய நாதம்



கிராமிய உழைப்பாளர் சங்கமானது எம்மைப்போன்ற கூலித்தொழிலாளமக்களை முதன்மைப்படுத்தி தன் வேலைத்திட்டத்தை செய்கின்றது இச்சங்கத்தில் நான் அங்கத்தவராக இணைந்து 2005ம் ஆண்டிலிருந்து எமது கிராமத்தில் அமைக்கப்பட்ட கிளைக்குழுவிற்கு தலைவராக செயற்பட்டு வருகின்றேன். இச்சங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத் திட்டங்கள் அனைத்தும் கூலித்தொழிலாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது கூலித்தொழிலாளர்களுக்கென ஒரு அமைப்பு வளர்ந்து வருவதை நாம் வரப்பிரசாதமாக கருதுகின்றோம். கி.உ.சங்கத்தை நம்பி எமது பங்களிப்பை வழங்கிவருகின்றோம்.

**பத்திரிகை**

இதயநாதம் பத்திரிகையானது கூலித்தொழிலாளர்களின் பிரச்சனையை அனைவரும் அறியக்கூடிய மாதிரி வெளிக்கொண்டு வருகின்றது. இதுவரை காலமும் கூலித்தொழிலாளர்களை முதன்மைப்படுத்தி எந்தப்பத்திரிகையும் வெளிவரவில்லை. இப்போது வெளிவந்து கொண்டிருக்கும் இதயநாதம் எமது பிரச்சினைகளை எழுதுவதால் விரும்பிப்படிக்கின்றோம். இது கூலித்தொழிலாளர்களுக்கு மிகவும் அவசியம் என்பதை உணர்ந்துகொண்டுள்ளோம். ஆகவே இது தொடர்ந்து வெளிவரவேண்டும் என விரும்புகின்றோம். அத்துடன் எமது கிளை அங்கத்தவர்கள் சங்கம்தொடர்பாக என்னுடன் அவ்வப்போது பேசிக்கொள்ளும் விடையங்களையும் இந்த இடத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். அதாவது நிதிப்பலம் பொருந்திய எத்தனையோ அமைப்புகள் எமது கிராமத்தில் செயற்பட்டு வந்தாலும் நாம்பட்ட இடர்காலங்களில் எமக்கென எந்த உதவியும் செய்யவில்லை. ஆனால், கி.உ.சங்கம் எமது துயர் கண்டு தாமகவே முன்வந்து இடர்கால நிதியாக மூன்று கட்டங்கள் தந்து உதவி புரிந்தது. அதனால் கி.உ.சங்கமானது எமக்கு மிக அவசியம். இது என்றும் எங்களுடன் நிரந்தரமாக செயற்படவேண்டும் என்று எல்லோரும் விரும்புகின்றனர்.

**திருமதி சுப்பிரமணியம் செல்வராணி**
**[illegible] கிளை இல.05, சரஸ்வதி கிராமம், உரும்பிராய் வடக்கு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகப் பெண்ணின் ஒரு நாள்



சாதி, இன, மத பேதமற்ற வளங்கள் சமமாக பகிரப்படுகின்ற ஆண், பெண் சமநிலையைப் பேணுகின்ற நியாயமான மற்றும் சௌபாக்கியமான ஒரு சமூகத்தை நோக்கி செயற்ப்படுகின்ற நாம் எமது செயற்பாடுகளோடு சேர்ந்து வருடா வருடம் மகளிர் தினத்தை மார்ச் மாதம் 8ம் திகதி கொண்டாடி வருகிறோம். வருடா வருடம் ஒவ்வொரு தொனிப்பொருளை மையப்படுத்தி மகளிர் தினத்தை கொண்டாடுவதோடு இதன்போது சமூக பொருளாதார கலாச்சார ரீதியிலாக பெண்களின் அடக்குமுறைக்கு எதிராக குரல் எழுப்புகிறோம். மகளிர் தினம் முடிய அவ்விடையங்களை அடியோடு மறந்து விடுகின்றோம். ஆனால், மலையக பெண்கள் தொடர்பாக இவ்விடயங்களில் கவனம் செலுத்தப்படுவது மிகவும் குறைவு. ஆகவே, மகளிர் தினத்தை கொண்டாடுவதற்கு முன்பாக மலையக பெண்களின் அவல நிலை தொடர்பாக சற்று தெரிந்து கொள்வோம்.

18ம் நூற்றாண்டில் பிருத்தானியர் இலங்கையை ஆண்டு வந்த அதே நேரம் இந்தியாவையும் ஆண்டு வந்தனர். இக்காலகட்டத்தில் தென்னிந்தியாவில் மக்கள் தொகை விரைவாக அதிகரிக்கத் தொடங்கியது. ஆனால் மக்கள் அதிகரிப்புக்கேற்ப நில அதிகரிப்பு காணப்படவில்லை. ஆகவே, அதிகரித்த பஞ்ச நிலை காரணமாக மக்கள் இடம்பெயரத் தொடங்கினர். இக்காலகட்டத்தில் தான் (1800-1900 காலப்பகுதி) பிருத்தானியர் மலையகப் பிரதேசத்தில் பெரும் போகப் பயிர்களை பயிரிடத் தொடங்கினர். ஆகவே அவர்களுக்கு வேலைக்காக அதிக தொழிலாளார்கள் தேவைப்பட்டனர். எனினும் அப்போது மலையகத்தில் வாழ்ந்த கண்டியச்சிங்களவர்கள் இத்தொழிலில் ஈடுபட விரும்பவில்லை. எனவே, தென்னிந்தியாவில் வாழ்ந்த மலையக தமிழ் மக்கள் பிருத்தானியரினால் 1827ம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டனர். அழைத்துவரப்பட்ட இவர்கள் பெரும்போக பயிர்ச்செய்கையில் மாத்திரமல்ல ரயில் பாதை மற்றும் நெடுஞ்சாலைகள் உருவாக்கம் போன்ற செயற்பாடுகளிலும் தொழிலாளர்களாக ஈடுபட்டனர்.

அன்றிலிருந்து இவர்களின் சமூக கல்வி கலாச்சார, பொருளாதார செயற்பாடுகள் பின்தங்கியதாகவே காணப்படுகிறது. இந்நிலையில் மலையக பெண்களின் நிலை மிகவும் பரிதாபத்துக்குரியது. லயன் அறைகளில் வாழ்கின்ற இவர்கள் பலவிதமான அடக்குமுறைக்கு முகம் கொடுக்கின்றனர். குறிப்பாக தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்கின்ற பெண்கள் தமது குடும்பத்தில், தோட்ட நிர்வாகத்தில, தமது சமூகத்தில் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இந்த இதழின் ஊடாக தோட்டத்தில் வேலை செய்கின்ற பெண்களின் ஒரு சில பிரச்சனைகளை மாத்திரம் முன்வைக்கிறேன். எதிர்வரும் இதழ்களில் தொடர்ந்து மலையக மக்களின் நிலை மலையக பெண்களின் அடக்குமுறை தொடர்பாக எழுத நினைக்கிறேன்.

தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்கின்ற ஒரு பெண் அதிகாலையில் எழும்பி தன் கணவருக்கும் தன் பிள்ளைகளுக்கும் தனக்குமாக காலை மதிய உணவுகளை தயாரிக்கவேண்டும் என்று நினைக்காதீர்கள். காலை உணவுக்கு ஏதாவது சிற்றுண்டியும் மதியத்துக்கு சோறு என்றும் இல்லை. இரண்டு வேளைக்கும் ரொட்டியே சுடுகின்றாள். ஓரிரண்டு ரொட்டி என்று நினைத்து விட்டீர்களா?. இல்லை கிட்டத்தட்ட 10 ரொட்டியாவது சுடவேண்டும். ஒரு தேங்காய் சம்பல் தயாரிக்கவேண்டும். அதற்கு பிறகு பாடசாலைக்கு செல்லும் தமது பிள்ளைகளை தயார்படுத்தி அவர்களுக்கு உணவு கொடுத்து தன் கணவருக்கும் தேவையானவைகளை எடுத்து வைத்து தானும் ஆயத்தமாகி 7 மணிக்கெல்லாம் பிரட்டு களத்திற்கு செல்ல வேண்டும். அங்கு கொஞ்சம் தாமதித்துப் போனால் அன்று வேலை இல்லை.

**அன்ரனி யேசுதாசன்**
P.P.D சமாதான பிரிவு, தேசிய இணைப்பாளர்

எப்படியாவது போய் 7.30 மணிக்கு கொழுந்து பறிக்கத் தொடங்கினால் மாலை 5 மணி வரை கொழுந்து பறிக்க வேண்டும். பகல் உணவுக்கான ரொட்டியை சாப்பிட கொஞ்சம் நேரம் தரப்படும். அந்த கொஞ்ச நேரத்தை விட சற்று உட்கார்ந்து இருந்தால் (போதும் போதும் எழும்பு) என்ற கண்காணியின் சத்தம் கேட்கும். இந்த நிலையிலும் 20 கி.கி அதிகமான கொழுந்து பறித்தால்தான் அன்றைய நாள் சம்பளம் (இதை ஒரு நாள் பேர் என்பர்). இல்லாவிட்டால் அரை நாள் சம்பளம் சுமார் இருநூறு வருடகாலமாக வேலை செய்கின்ற இவர்களின் ஒரு நாள் சம்பளம் 200 ரூபா. இவ்வாறு மாலை வரை வேலை செய்து வீடு திரும்புகின்ற பெண்மணி தான் குளித்து தன்னுடைய பிள்ளைகளுடைய உடைகளைக் கழுவி இரவு உணவு சமைக்க தொடங்க வேண்டும். இவ்வாறு சமைத்து வீட்டில் உள்ளவர்களுக்கு சாப்பாடு கொடுத்து தானும் சாப்பிட்டு நித்திரைக்கு போகும்போது இரவு 9 மணியையும் தாண்டுகிறது. இதிலும் தன் கணவர் ஒரு குடிகாரர் என்றால் இந்நிலை மேலும் மோசமடையும். வெயிலில் காய்ந்து மழையில் நனைந்து அன்றைக்கு இரத்தத்தை உணவாகக் கொடுத்து கஸ்ரப்பட்டு வந்து நித்திரைக்குப் போகும் அப்பெண்ணுக்கு நித்திரையைக் கூட சரியாக செய்யமுடியவில்லை. காரணம் அவர்கள் படுக்கும் லயன் அறை மிகவும் சிறியதாகும்.

உணவு தொடர்பான விடயத்தில் மேலும் ஒரு முக்கிய விடயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இலங்கையின் இன்றைய பொருளாதார நிலையில் மலையக மக்கள் ரொட்டியைக் கூட சாப்பிட முடியாத நிலையில் வாழ்கிறார்கள். காரணம் மலையக மக்களின் இருநேர பிரதாண உணவு ரொட்டியாகும். ஆனால் இன்று மாவின் விலை அதிகரிக்கத் தொடங்கியதோடு பெண்கள் தங்களது பிள்ளைகளுக்கு உணவு கொடுக்க முடியாது மிகவும் கஸ்ரப்படுகிறார்கள்.

இது மாத்திரமன்றி மலையக பெண்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சனைகள் இன்னும் எத்தனை எத்தனையோ? திறந்த பொருளாதாரக் கொள்கை, உலகமயமாக்கல், தற்க்கால அரசாங்கத்தில் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டினால் இப்பெண்கள் வலுவிழந்தவர்களாக வாழ்ந்து வருகிறார்கள். தமது இலாபத்தை மாத்திரம் கவனத்தில் எடுத்து தற்கால அரசாங்கத்தின் அமைச்சு பதவிக்கு ஆசைப்பட்டு அரசாங்கத்தில் இணைந்துகொண்டு தோட்டப்புற மக்களின் நலனுக்காக என்று பொய் பறைசாற்றிக் கொண்டு தனவந்தர்களாக சுகபோக வாழ்க்கை நடத்தும் தொழிற்சங்கவாதிகள், அரசியல்வாதிகள் இவ்விடயத்தில் எடுத்த நடவடிக்கை என்ன? தொடர்ந்து இம் மலையக பெண்களின் துன்ப துயரங்களைப் பார்த்துக் கொண்டிருப்பார்களா? அல்லது எதிர்காலத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கை ஏதும் எடுப்பார்களா என்பதே இப்போது மலையக பெண்களின் வினாவாகவுள்ளது.

## 40 பயனாளிகளுக்கு வளர்ப்புக்கோழி வழங்கப்பட்டுள்ளது

அண்மையில் F.A.O அமைப்புடன் இணைந்து வலிதென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம் அதன் அங்கத்தவர்களுக்கு சுமார் 40பேருக்கு தலா 3000ரூபா வீதம் பெறுமதிமிக்க வளர்ப்புக கோழிகளை பயனாளிகளுக்கு வழங்கியுள்ளது.

சங்கத்தின் தலைவர் தி.ராஜ்குமார் தலைமையில் இடம்பெற்ற மேற்படி வைபவத்திற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் சுகாதார திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி அமுதலிங்கம் அவர்களும் சிறப்புவிருந்தினராக சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி செல்வி மரியதாஸ் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகசேவையில் இளையோர் பங்களிப்பு

இதயநாதத்திற்காக தொகுத்து வழங்கியவர்
**நா.இராசநாயகம்**
முகாமைத்துவ உதவியாளர்,
சமூகநலத்துறை திணைக்களம்,
மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்.

## 01.ஆரோக்கியமான குடும்பம், சமூகம்

**ஆரோக்கியமான குடும்பம் என்றால் என்ன?**

உடல் நோயற்ற மனிதனையோ குடும்பத்தையோ ஆரோக்கியமானவர்கள் என்று சொல்லமுடியாது. உடல், உள ஆரோக்கியத்தோடு ஒருமனிதன் வாழ்வதற்கு வேண்டிய அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்யக்கூடிய அனைத்து வளங்களையும் உரிமைகளையும் கொண்டிருத்தல் உண்மையான ஆரோக்கியமாக கருதமுடியும். உடல், உள, ஆன்மீக வளர்ச்சி பெற்றிருக்கவேண்டும். கல்வியுடன் பொருளாதார வளர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

## 02. பெற்றோர் ⇨ குழந்தை ⇨ குடும்பம் ⇨ சமூகம் ⇨ தாய்நாடு

ஆரோக்கியமான பெற்றோருக்கு ஆரோக்கியமாக குழந்தை பிறந்து அவனை, அவளை நல்ல பண்பான, ஆரோக்கியமான பல்துறைசார் வளர்ச்சியுடன் சமூக பிரதிநிதியாக வளர்ந்து பல குடும்பங்கள் சேர்ந்து ஒரு சமூகம் உருவாகின்றது. ஒவ்வொரு குடும்பமும் நற்பிரஜைகளை சமூகத்திற்கு கொடுத்தால் அன்றி நல்ல சமூகம் உருவாகமுடியாது. நாம் எமது பிள்ளைகளை சமூகத்திற்கு ஒவ்வாத நிலையில் விட்டுவிட்டு சமூகத்தில் நல்லதை எதிர்பார்க்கமுடியாது.

## 03.சமூக கூட்டுவாழ்வு

எந்த ஒரு குடும்பமும் சமூகத்தில் தனித்து வாழ முடியாது. உயிரினங்களில் மனிதன் முதன்மையானவன். பகுத்தறிவுள்ளவன், தூரநோக்கு கொண்டவன், பின்விழைவுகளை அறியக்கூடியவன். இவ்வாறு சிறப்புள்ளவர்கள் சமூகத்தில் ஒருவர் ஒருவரை நேசித்து ஏற்று ஒன்றாய் வாழமுன்வரவேண்டும். குடும்பப் பிரைச்சனைகள், சமூகத்தைப் பாதிக்கும் சமூகப்பிரச்சனை, நாட்டைப் பாதிக்கும் நாட்டுப் பிரச்சினைகள் ஒவ்வொரு வீட்டையும் பாதிக்கும்.

## 04. குடி கெடுக்கும் குடியை விரட்டுவோம்.

குடி கெடுக்கும் குடி மதுப்பழக்கம் இளம் பராயத்தில் நண்பர்களுடன் சேர்ந்து சிறு சந்தோசம் என நினைத்து பொழுது போக்காக ஆரம்பமாகிறது. பின் உற்சாக பானமென நினைத்து அதிகரிக்கின்றது. நாளடைவில் மறக்கவும் வெறுக்கவும் முடியாத பழக்கமாக மாறிவிடுகின்றது. தொடர்ந்து குடும்பத்தில் தொழில் செய்யும் ஆற்றலிழந்து வறுமையும் வெறுமையும் உண்டாக்கி பொருளாதார வீழ்ச்சியும் பிரச்சனைகளும் வளர ஆரம்பமாகின்றன. கணவன்-மனைவி உறவு விரிசலடைந்து சமூகசீரழிவுவரை இட்டுச் செல்கின்றது. இப்பிரச்சனைகளுக்கும் விளைவுகளுக்கும் 2 காரணங்கள் உண்டு


01. உடனடிக்காரணம்.
02. அடிப்படைக்காரணம்.

அதாவது ஒரு குடும்பத்தில் வறுமை ஏற்பட அடிப்படை காரணம் தொழிலின்மை என்றால் அடிப்படைக்காரணம் மதுவினால் தொழில் செய்யும் ஆற்றல் இழந்தமையாகும். ஒருவர் மது போதையில் இரவு வீதியோரம் பற்றைக்குள் வீழ்ந்து கிடக்கிறார். இவரை பாம்பு தீண்டி மரணம் சம்பவிக்கின்றது

இங்கே இவரது மரணத்திற்கு உடனடிக் காரணம் காரணம் பாம்பு தீண்டியமை அடிப்படைக்காரணம் மதுவாகும்.

## 05. குடும்பத்தைப் பாதிக்கும் நெருக்கீடுகள்

01. பொருளாதாரம்
02. ஊடகம்
03. சூழல்
04. யுத்தம்
05. இயற்கை



## 06. சமூக ஒருமைப்பாட்டின் வெளிப்பாடு

ஒரு சமூகம் ஒற்றுமையாகவும் சிறப்பாகவும் இருக்கிறது என்றால் அதனை வெளிப்படுத்துவது சமூக அமைப்புக்களாகும். அவற்றில் ஆலயம், சனசமூக நிலையம், பாடசாலை மற்றும் பொது அமைப்புக்கள் போன்றவை யாகும் இவற்றின் அமைவிடம் சுற்றுச்சூழல் என்பவை அச்சமூக மக்களின் வாழ்வாதாரத்தையும் ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தும் மிகப்பெரும் பொதுச் சொத்துக்களாகும். பொது இடங்களையும் வீதிகளையும் ஒன்றுபட்டு துப்பரவு செய்வதோடு இவ்விடங்களில் குப்பை போடுவதை தடுக்கவும் தட்டிக்கேட்கவும் முன்வர வேண்டும். எமக்கேன்வீண்வம்பு என்று விலகிச் செல்லக்கூடாது. பொறுப்புக்கள் கடமைகளிலிருந்து விலகிக்கொண்டாலும் அதன் விளைவுகளிலும் பாதிப்புக்களிலும் இருந்து தப்பிக்கொள்ள முடியாது.

## 07. கல்வியும் தொழிலும்

கல்வி ஒரு மனிதனை பூரணத்துவம் உள்ளவனாக்கும். உன் இளமையிலேயே கல்வியை பெற்றுக்கொள்ளவேண்டும்.. "இளமையிற்கல்வி சிலையில் எழுத்து" தவறவிட்டால் பெறமுடியாது. அப்படியும் தவறவிட்டால் தொழிற்கல்வியையும் பயிற்சியையும் பெற்றுக்கொள்ளலாம். இவையே உன்னையும் சமூகத்தையும் வாழ வைக்கும் வெறும் கவர்ச்சியிலும் மாயையிலும் மயங்கி இன்பகரமான வாழ்வை துன்பகரமாக மாற்றி விடக் கூடாது.

தொழில் என்றால் என்ன? ஒருமனிதன் தன்னையும் தன்னைச்சார்ந்தவர்களையும் வாழவைக்க வாழ்வாதாரத்தை பெருக்கிக் கொள்ள சமூக அந்தஸ்தில் உயரவேண்டிய பணத்தைப் பெற மேற்கொள்ளும் ஒரு பணியாகும். ஆனால் இது சட்டத்தால் அங்கிகரிக்கப்பட்ட ஒன்றாக இருக்கவேண்டும். ஒரு சமூகம் வாழ எது தேவையானதோ அதை உற்பத்தி செய்ய வெளியிட அல்லது தேவையை பூர்த்திசெய்ய அவ்வேலையானது உதவிசெய்ய வேண்டும்.

**உ-ம்:-** ஒரு மனிதன் வாழ தேவையை பூர்த்திசெய்ய அரசபணி, மேசன், கமம், பால் உற்பத்தி போன்றவை அவசியமானது. கொலை, கொள்ளை, விபச்சாரம், கசிப்பு உற்பத்தி போன்றவை மனித வாழ்வுக்கு தேவையற்றவை.

## 08. தேடிக்கொள்ளக்கூடிய தொழில்கள்

01. அரச உத்தியோகம்:- இதுக்கு வேண்டிய கல்வித்தராதரத்தை கொண்டிருத்தல்
02. தனியார் துறை நிறுவனங்கள்
03. சுயதொழில் முயற்சி:- மற்றவர்களில் சார்ந்திராத முயற்சி
   அ. விவசாயம்
   ஆ. கால்நடை வளர்ப்பு
   இ. வர்த்தக நிலையம்
   ஈ. சிறுவியாபாரம்
04. ஒப்பந்த வேலைகள்:- வீதிகள், கட்டடங்கள் போன்றவை.
05. தையல் நிலையம் :- பிடவை, நுளம்பு வலை உற்பத்தி செய்தல்.
06. மின்னிணைப்பு நீர்க்குழாய் பொருத்துதல்.
07. சைக்கிள் பூ மற்றும் அலங்காரப் பொருள்கள் உற்பத்தி.

இவற்றின் மூலம் நீங்கள் ஒருதொழிலதிபராக மாறி வளர்ந்து பல இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வழங்க முடியும்.

## 09. காலத்தைப் பயன்படுத்துதலும் சேமித்தலும்.

**Time is precious don't waste time**

காலம் பெறுமதியானது. பணத்தையும் பொருளையும் சேமித்து வைக்கலாம். நேரத்தைப் பயன்படுத்தினாலன்றி சேமிக்க முடியாது. ஒவ்வொரு நிமிடத்தையும் எமக்காகவும் சமூகத்திற்காகவும் பயன்படுத்த வேண்டும்.

**இளைஞர் யுவதிகளே சமூகசேவையில் உங்கள் பங்களிப்பு என்ன?**

முதலில் பெற்றோரின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யுங்கள் " தந்தை மகற்(கு) ஆற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல்" என்பது போல் உங்கள் கடமை "மகன் தந்தைக்(கு) ஆற்றும் உதவி இவன் தந்தை என்நோற்றான் கொல்எனும் சொல்" எனும் வள்ளுவரின் குறளுக்கிணங்க உங்களை வளர்த்து மேற்சொல்லபட்ட நெருக்கீடுகளை தகர்த்து உங்களையும் உங்கள் குடும்பத்தையும் சமூகத்தில் அடையாளப்படுத்துங்கள். இவற்றோடு சமூத்திற்குள் நுளையுங்கள்.


01. நான் எனது குடும்பம் எனது சமூகம் என்ற உணர்வோடு இவை இப்படித்தான் இருக்கவேண்டும் என்று கற்பனை செய்து கனவுகாணுங்கள்.
02. இக்கனவு நனவாகவும் செயலா கவும் மாற இலக்கை தீர்மானியுங்கள்.
03.இலக்கை நோக்கி முன்னேற இன்றே அடி எடுத்து வைத்து நடக்க ஆரம்பியுங்கள்
04.அறிவுசார் நூல்களைக் கற்று உங்கள் திறன்களை விருத்தி செய்யுங்கள்
05.பெரியோருக்கும் கற்றோருக்கும் மதிப்புக்கொடுத்து கீழ்ப்பணிந்து நடவுங்கள்.
06.சமூக அமைப்புக்களில் ஆர்வத்தோடு அங்கத்தவராக இணைந்து கொள்ளுங்கள்.
07. நீங்கள் சார்ந்த அமைப்புக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுங்கள்.
08.சமூகப்பணிகளில் தலமைதாங்கி வழிநடத்திச்செயற்படுங்கள்.
09.அன்பாகவும் பண்பாகவும் பக்குவமாகவும் பேசக்கற்றுக் கொள்ளுங்கள்.
10.இருக்குமிடத்தில் மரியாதையாகவும் அழகாகவும் அமர்ந்து கொள்ளுங்கள்.

**சமூகத்தை வென்று வளமுடன் வாழ்க!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை இரட்டைப்பார்வை கருகும்

**சச்சிதானந்தன் சுகிர்தராஜா**




சாதாரண ஒளிப்பந்தம் உலகளவில் பெரிய அவதானிப்புக்குள்ளாகியிருக்கிறது. 1936 பேர்லின் ஒலிம்பிக் போட்டியில்தான் ஒளிப் பந்தத்தின் உலகச் சுற்றுலா ஆரம்பமாகியது. இதைத் தொடங்கியவர் கிட்லர். ஆரிய இனத் தின் மகாத்மியங்களைப் பரப்புரைக்க இந்த விளையாட்டுக்களையும் தீப்பந்தங்களையும் பாவித்துக் கொண்டார். இப்பொழுது இதே தீவெட்டி மேற்கத்தைய கலாச்சாரத்தின் சமீபத்திய உன்னதச் சின்னமான மனித உரிமைகளை போதிக்கும் கூரான கருவியாக மாற்றப்பட்டிருக்கிறது. காலனியக் காலத்தில் கிறிஸ்தவம் இருளில் வாழ்கிறவர்களை நாகரீக நாயகர்களாக உருவாக்கப் பயன்படுத்தப்பட்டது. பிறநாட்டு பிற்போக்குத்தனங்களை பழுது பார்க்கும் அதே வேலையை இன்றைய பின் காலனியச் சூழலில் மேற்கத்தைய அரசுகள் மனித உரிமைகள் மூலம் சாதிக்க முயல் கின்றன.

**மேற்கின் மனித உரிமை ஆதரவுகூட முரணனானது. மனித உரிமைகளுக்கும் அரசியல் இலாபங்களுக்கும் பொருளாதார வாய்ப்புகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டால் மேல்நாட்டு அரசுகளை பொறுத்தமட்டில் தங்களின் அரசியல், வணிக, ஆதாயமே முக்கியம். சவுதி அரேபியா இதற்கு உத்தம உதாரணம்.**

சீனாவின் மனித உரிமைகள் பற்றிய பதிவேடு அவ்வளவு பிரகாசமானதல்ல. சீன ஆக்கிரமிப்பினால் திபெத் கலாச்சாரம் கரைந்து கொண்டிக்கிறது. திபெத் ஏற்படுத்திய கல கலப்பில் மறக்கப்பட்ட இன்னொரு சீனா விளிம்பு நிலை மக்கள் Xinjiang மாகாணத்தில் வாழும் ஊகிகுர்ஸ்கள் (Uighurs). இவர்கள் முஸ்லிம்கள். இவர்க ளைச் சீனமயமாக்குதலில் பீஜிங் அரசு தன் எந்திரங்களைச் செம்மையாகப் பயன் படுத்தி வருகிறது. ஊகிகுர்ஸ்கள் இஸ்லாம் மதத் தைச் சேர்ந்தவர்களாகையால் இவர்களின் பிரச்சனைகளைத் தூக்கிக்காட்ட மேற்கத்தைய ஊடகங்களிடையே ஒரு தயக்கமிருக்கிறது. சீனாவுக்குப் பெரிய வல்லரசுகளின் வரிசையில் இடம்பிடிக்க ஆசை. ஒரு வல்லரசின் அடையா ளம் பல்லின பல்மொழி பல்சமய பல்கலாசார மக்களுக்குக் காட்டும் தாராளத் தன்மையாகும். இன்னொன்று பல கருத்துகள் முன்பின் முர ணாக இருந்தாலும் அவற்றை சகித்துக்கொள் ளும் தன்மையே. இது சீனாவிடம் இல்லை. இந்த பரந்த நாட்டை சீன அரசியல் அமைப்பு பெரும்பான்மையினரான ஹான் இனக் கண் ணோட் டத்திலேயே பார்க்கிறது, நிச்சயிக்கிறது. இந்த் கட்டுரையின் பிரதான கவனம் சீனா அல்ல. மேற்கத்தைய நாடுகளின் மனித உரி மைப் பேச்சே.

இந்தக் கட்டத்தில் மனித உரிமைகள் தோற்றம் குறித்து எளிமைப்படுத்தப்பட்ட ஒரு சின்னத்திரட்டு. மனித உரிமைகள் பற்றிய கருதுகோள்கள் சடுதியாக தோன்றியவையல்ல. அவற்றைப் பற்றிய எண்ணங்களும் நிலையான வையுமல்ல. இவை மாறி வரும் சமூக, அரசி யல், பண்பாட்டுத் தேவைகளுக்கும் அதற்கு மேலாக மேலாட்சி செய்யும் நாடுகளின் வினை முறைதிறன்களுக்குப் (strategic) பொருந்துமாறும் பதப்படுத்தப்பட்டவை. இவை மூன்று வகை சார்ந்தவை. முதலில் ஐக்கிய நாடுகள் சபையில் இரண்டாம் உலகப் போருக் குப்பின் அறிமுகப்படுத்தப்பட்டபோது தனி மனித அரசியல் உரிமைகளுக்குத்தான் அதிக மதிப்புக் கொடுக்கப்பட்டது.

தனி மனித சுதந்திரத்தில் அரசு தன்னிச்சை யாகத் தலையிடுவதைத் தவிர்ப்பதே இந்தப் பிரகடனத்தின் நோக்கம். இந்த தனிப்பட்ட மனித உரிமைகளுக்கான பின்னணி பிரான்சுப் புரட் சியும் அமெரிக்க உள்நாட்டுக் கலவரமுமாகும். இதற்கு அதிகளவு ஆதரவு மேற்கத்தைய தாராண்மையும் சனநாயக நாடுகளிலிருந்து கிடைத்தது. இந்த எண்ணங்களை பதிவு செய்யும் பிரதிகள்:Universal Declaration மற் றும் International Covenant on Social and Civil Rights. இதற்குப் பிறகு 60களில் சோச லிச நாடுகளினால் அரசியல், பொருளாதார, பண்பாட்டு உரிமைகள் முன்னெடுத்து வைக் கப்பட்டன. இதற்கு 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடைபெற்ற சோசலிசப் புரட் சியே காரணமாகும். மனித உரிமைகளைத் தனி ஆளின் பிரத்தியேகம் சம்பந்தமாக அரசி யல், பொருளாதார, சூழலமைப்புகளை நீக்கிப் பார்க்கும் மேற்கத்தைய நாடுகளின் சார்புத் தன்மைக்கு சோசலிசக் கருதுகோள்களின் கூட்டு உரிமைகள் திருத்தப்பாடாகும்.

எவ்வாறு தனி மனித உரிமைகள் காப்பாற் றப்படுகின்றனவோ அவ்வாறே இனக் குழுமங்க ளின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது சோசலிச நாடுகளின் கருத்து. மூன்றா வது கட்டத்தில் நாடுகளின் தேசிய வள உற் பத்தி அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி உள்ளார்ந்த மனித உரிமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. புதிதாக விடுதலையடைந்த ஆப்பிரிக்க, ஆசிய, லத்தின் ஆமெரிக்க நாடுகள் காலனிய ஆட்சி யின்போது சீரழிக்கப்பட்ட தங்களின் பொரு ளாதார உடைமைகள், வளங்களை மீண்டும் சீர்திருத்துவது தமக்குரிய மனித உரிமைகள் என்று வலியுறுத்தின. ஐ.நா.சாசனம் சரத்துக்கள் 55, 56 லும் Universal Declartion 22, 27 லும் இவை அங்கீகரிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இவை எல்லாம் வாசிப்பதற்கு இனிமையாக இருக்கின்றன. ஆனால் இவற்றை பூலோக அரசியல் அரங்கில் கையாளும்போது தான் சங்கடம் வருகிறது.

மேற்கத்தைய சொல்லாடலில் மனித உரிமைகள் பற்றி இரட்டை நிலை உண்டு. மேலே சொன்ன மூன்று வகையில் மேற்குலகச் சொல்லாடலில் முதலாவதே முன்னிறுத்தப்படு கிறது. இன்று சீனாவைத் தாக்குவதற்குத் தனி யார் உரிமைகளே பயன்படுத்தப்படுகின்றன. மேற்கத்தைய வர்ணிப்பில் மனித உரிமைகள் கூட ஒரு குறுகிய தேர்வே. பேச்சு, எழுத்துச் சுதந்திரம், சுய நிர்ணயம், வாக்குரிமைகளையே மேற்கத்தைய அரசியல் வாதிகளும் விமர்சகர்க ளும் பிரதானப்படுத்துகின்றார்கள். தனி மனித உரிமையின் முக்கிய அம்சமான சித்திரவதை யைப் புறக்கணித்துவிடுகிறார்கள். சீனாவின் மனித உரிமைக்கறைகள் தெரிகிறது. அதே போல் சாதாரண மனித உரிமைகளுக்கே இடம் தராத அமெரிக்க அரசின் கொள்கை மரபு கண்ணுக்கு தெரிவதில்லை. பர்மா பௌத்த பிக்குகளை அதிகாரத்துக்கு உண்மையைப் பேசச் சொல்லும் ஐரோப்பிய அரசியல் தலை வர்கள் அமெரிக்காவின் அட்டூழியத்திற்கு முன்னால் வாய் அடைத்துப்போயிருக்கிறார்கள். Water Boarding சித்திரவதை முறை (ஆளுக்கு முகத்தைக் கட்டி நீருக்குள் மூழ்குவது போல் அமிழ்த்தி எடுப்பது) புஸ் அங்கீகரித்தபோது ஜனநாயகத்தின் கண்காணிகளான பிரித்தானி யாவோ ஜெர்மனியோ பிரான்சோ எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

மேற்கின் மனித உரிமை ஆதரவு கூட முரணானது. மனித உரிமைகளுக்கும் அரசியல் லாபங்களுக்கும் பொருளாதார வாய்ப்புக்களுக்கு மிடையே மோதல் ஏற்பட்டால் மேல்நாட்டு அரசுகளைப் பொறுத்தமட்டில் தங்களின் அரசி யல், வாணிக ஆதாயமே முக்கியம். சவுதி ஆரேபியா இதற்கு உத்தம உதாரணம். ஜனநாயகத்தின் அனா ஆவன்னாவைக்கூட மதிக்காத இந்த ஆட்சியைத் தங்களின் வியாபார நோக்கு காரணமாக மேற்கு நாடுகள் போஷித்துவருகின்றன.

மேல் நாடுகளின் இரட்டைக் குரல் தனி வகையானது. விளையாட்டு வீரர்களை ஒலிம் பிக் பந்தயத்தில் கலந்து கொள்ள வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். ஆனால், சீனாவின் சந்தையில் வர்த்தகம் செய்ய மேற்கு நாட்டு வணிக ஸ்தாபனங்கள் போட்டி போடுகின்றன. சீன மக்களும் அரசும் வேறு. சீன மக்களுக்கான ஒலிம்பிக் விளையாட்டுகள் நடைபெற வேண் டும். இதைத்தான் தலாய் லாமாவும் விரும்பியி ருந்தார். எனக்கு என்னவோ விளையாட்டு வீரர்களை இந்த போட்டிகளில் பங்கு வகிக்க வேண்டாம் என்பது மேற்குலக நாடுகளின் இரட்டை நிலைப்பாட்டுக்கு இரையாக்கப்பட்ட கடா என்றுதான் தோன்றுகிறது.

**நன்றி (காலச்சுவடு)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுத் தட்டுப்பாடு...! இலங்கை நிற்பது எரிமலையின் மேலா?

D.ரோஸ்மேரி
P.P.D சமாதானப்பிரிவு,
இணை இணைப்பாளர்.

கடந்த வருடங்களைவிட புதுமையான விதத்தில் உணவு விலை அதிகரித்துள்ளது. பிரதான விதமாக இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளுக்கு இது ஒரு விஷேட பிரச்சனையாக உருவாகியுள்ளது. ஐக்கிய நாடுகளின் கோதுமை மா விலை ஜனவரி மாதம் தொடக்கம் மார்ச் வரையான மூன்று மாதகாலத்தினுள் அமெரிக்க டொலர் 375 தொடக்கம் 440 வரை(17% னால்) அதிகரித்துள்ளது. கடந்த 36 மாத காலத்தினுள் உலக கோதுமை மாவின் விலை (181% னால்) அதிகரித்துள்ளதுடன் உலக உணவு விலை 83% னால் அதிகரித்துள்ளது.

உணவு மற்றும் விவசாய அமைப்பின் (FAO) அறிக்கைகளின் படி 2007ம் ஆண்டில் உலக உணவு விலை 40% விகிதத்தினால் உயர்ந்துள்ளது எனவும் உணவு விலை அறிக்கையில் 2007ம் ஆண்டு அதிகூடிய பணவீக்கமுடைய ஆண்டாக காணப்படுகின்றது. உலகில் வாழுகின்ற அதிக பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய பில்லியன் கணக்கிலான ஏழை மக்கள் பட்டினியால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

உலகில் மிகவும் வறுமை வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் அண்மையில் பட்டினி பேரலையால் பாதிக்கப்படவுள்ளனா் என உலக உணவு வேலைத்திட்டத்தின் (WFP) நிறைவேற்று அதிகாரி ஜொசெட் ஷிரான் அம்மையார் அவர்கள் அண்மையில் குறிப்பிட்டுள்ளார். கடந்த இரு தசாப்தகாலமாக காணப்பட்ட வறுமை குறைந்து செல்கின்ற தன்மை பின்தங்கிய நிலையில் உள்ளது. அத்துடன் பட்டினி மற்றும் வறுமை சிறுகாலப் பகுதிக்குள் அதிவேகத்தில் உயர்ந்து சென்றுள்ளது.

உணவு விலை அதிகரிப்பு ஜீவ சக்தியை எந்த அளவுக்கு பாதிக்கிறது என்பதை விளக்குவதற்கென வறுமையின் வளர்ச்சி அதிகரிக்கின்றமை தொடர்பாக மினெசொடா (Minnesota) பல்கலைக்கழகம் முதன் முதலில் தயாரித்த ஆய்வு அறிக்கையை மீளாய்வுக்குட்படுத்தினர். முதலில் தயாரித்த அறிக்கையின் படி உலக சனத்தொகையில் 625 மில்லியன் பட்டினியால் மற்றும் மந்தபோஷனையினாலும் பாதிப்புக்குள்ளாக்கப்படுவார்கள் என நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், அத்தொகை 1.2 பில்லியனுக்கும் மேலான தொகையை ஏற்படுத்தியுள்ளது. தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டினியால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 892 மில்லியனாகும். உலக வங்கியின் அறிக்கைகளின் படி உணவு விலை 1% விகிதத்தினால் அதிகரித்தல் ஏழை மக்கள் தினந்தோறும் பெறுகின்ற உணவில் அடங்கியுள்ள கலோரியின் அளவு 0.5% விகிதத்தினால் வீழ்ச்சியடைகின்றது.

எவ்வாறாயினும் தற்காலத்தில் உருவாகி வருகின்ற தற்போதைய உணவு பிரச்சனை உணவு விலை பாரிய அலை போன்று அதிகரிகின்றமைக்கு காரணமாயுள்ளது. பொருளாதார விஞ்ஞானிகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களின் எடுத்துக்காட்டுகளின் படி உணவின் விலை அதிகரிக்கின்றமைக்கு எரிபொருளின் விலை அதிகரித்தல், காலநிலை மாற்றம், வர்த்தக சந்தையின் தீர்மானங்கள் மற்றும் பொருளாதார மாற்றங்கள் பாதிப்பை ஏற்படுத்தும்.

இவ்வாறான நிலமைகள் இலங்கையை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை பார்ப்போமானால் உணவு விலை அதிகரிப்பினால் இலங்கை மக்கள் பாதிக்கப்படுவார்கள். உலக வங்கியின் 2007ம் ஆண்டு அறிக்கையின்படி முழு நெல் உற்பத்தி 188.000 மெற்றிக் தொன் ஆகும்.அதற்கும் மேலான தொகையாக கோதுமை மா 952,000 மெட்ற்றிக் தொன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. உள்நாட்டு நெல் மற்றும் அரிசி உற்பத்தியின் படி ஒரு நபருக்கு ஒரு கிழமைக்கு 2 கிலோ அரிசி போதுமானது என கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கோதுமை மாவுடன் உபயோகமாகின்ற மற்றைய 50,000 மெற்றிக் டொன் உணவுப் பொருள்கள் முழு சனத்தொகைக்கும் போதுமான கலோரி பெறுமானத்தை பெற்றுக் கொடுப்பதற்கு இயலுமானதாக அமையும்.

இலங்கை வர்த்தக சந்தையில் ஒரு மெற்றிக் டொன் அரிசி அ.டொலர் 600 தொடக்கம் அ.டொலர் 1000 வரை வளர்ச்சியடைந்துள்ளது.இலங்கை அரசினால் நிறுவுவதற்க்கு முயலுகின்ற விலை ஒரு கிலோ அரிசிக்கு ரூபா 60 தொடக்கம் ரூபா 107 வரையான தொகையாகும். எவ்வாறாயினும் உலக உணவு விலை நாளுக்கு நாள் அதிகரித் துக்கொண்டே செல்கின்றது. இவ்வாறான காரணிகளினால் திடீரென உணவு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அறிக்கைகளின்படி உலக சனத்தொகை அதிகரிப்பதுடன் உணவுக்கான கேள்வி அதிகரித்து செல்கின்ற நிலையில் உணவுச் சந்தையின் உணவு வழங்குதல் குறைவதற்கு படிப்படியாக வீழ்ச்சியடைகின்ற இயற்கை வழத்தைப் போன்றே நடைபெறுகின்ற விவசாய நடவடிக்கைகளும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் உணவுத் தட்டுப்பாட்டை பார்க்கும்போது அறியக்கிடைப்பது என்னவென்றால் எந்த சந்தர்ப்பத்திலும் வெடித்துச் சிதறக்கூடிய எரிமலையின்மேல் நிற்பதைப் போன்றதேயாகும் அவ்வெரிமலை வெடிப்பதற்கு அண்மையில் உள்ளது என்பது அதன் வெப்பத்தில் அறியமுடியும்.

## சார்க் உச்சி ...

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவிடம் நிலவுகின்ற பெரியண்ணன் மனோபாவமாகும் சார்க் அமைப்பில் மிகப் பெரிய நாடாக இந்தியா இருக்கின்ற அதே வேளை மாலைதீவு, இலங்கை என்பவற்றைத் தவிர ஏனைய நாடுகளுடன் நில எல்லைகளைக்கொண்ட நாடாகவும் இருக்கின்றது. இந்தியா தன்னை ஒரு பிராந்தய வல்லரசாக நினைத்துக்கொள்வதால் சகநாடுகள் தொடர்பாக தனக்கு எல்லோரும் பணிந்து போக வேண்டும் என்ற பெரியண்ணன் மனோபாவத்தி லேயே செற்படுகின்றது. இது விடயத்தில் தென் ஆபிரிக்காவின் ஆளுமை சிறிதுகூட இந்தியாவுக்கு இருக்கவில்லை. இன்று ஆபிரிக்கப் பிராந்தியத்தில் இடம்பெறும் உள்நாட்டுப்பிரச்சனைகளைக்கூட தென்னாபிரிக்கா சுமூகமாக தீர்த்து வைக்கின்றது. இந்தியாவின் இந்தப் போக்கினால்தான் தென்னாசியாவில் உள்ள சிறிய நாடுகள் இந்தியாவுடன் உறவு வைத்துக் கொள்வதைவிட சீனாவுடன் உறவு வைத்துக்கொள்வதை பெரிதும் விரும்புகின்றன. காரணம் சீனா சகநாடுகளுடன் நண்பன் என்ற உறவுடன் அணுகுகின்றதே ஒளிய பெரியண்ணன் உறவில் அணுகுவதில்லை.

இரண்டாவது, சார்க் நாடுகளுக்கிடையே உள்ள இருதரப்புப் பிரச்சனைகளாகும். இந்தியாவுக்கும் பாகிஸ்த்தானுக்குமிடையே காஸ்மீர் தொடர்பாக பிரச்சனை நிலவுகின்றது. இந்தியாவுக்கும் பங்களாதேசுக்குமிடையே அசாம் சக்மா இனத்தவர் தொடர்பாக பிரச்சனை கள் நிலவுகின்றன. பாகிஸ்த்தானுக்கும் ஆப்கானிஸ்த்தானுக்குமிடையே தலிபான்கள் தெடர்பாக பிரச்சனை நிலவுகின்றது.

இப்பிரச்சனைகளை அரசியல் ரீதியாக தீர்ப்பதற்கான முயற்சிகளை சம்மந்தப்பட்ட நாடுகள் பெரியளவிற்குமுன்னெடுப்பதில்லை சமரசத்திற்குப்பதிலாக ஆதிக்க மனோபாவமே எல்லாத்தரப்பிலும் இருக்கின்றது.

மூன்றாவது, சார்க் நாடுகளுக்கிடையே நிலவும் உள்நாட்டு பிரச்சனைகளாகும். இந்தியாவில் காஸ்மீர், பஞ்சாப், அசாம், நாகலாந்து மக்களின் பிரிவினைப் போராட்டங்கள், இலங்கையில் தமிழர்களின் தனிநாட்டுப்போராட்டம், பாகிஸ்த்தானில் இஸ்லாமிய அடிப்படைவாத சக்திகளின் போராட்ம, பங்களாதேசில் சக்மா இனத்தவரின் போராட்டம், ஆப்கானிஸ்த்தானில் தலீபான்களின்போராட்டம் எனப்பல போராட்டங்கள் வளர்ச்சி அடைந்துள்ளன. இவற்றை அரசியல் ரீதியில் தீர்ப்பதற்கான கூட்டுப்பொறிமுறையை உருவாக்குவதில் சார்க்நாடுகள் பெரியளவில் அக்கறைகாட்டவில்லை. மாறாக போராட்டங்களை பயங்கரவாதம் என்ற பெயரில் அழிப்பதற்குத்தான் கூட்டு நடைமுறைகளைத் தேடுகின்றன. அவை ஒருபோதும் வெற்றியைத் தரப்போவதில்லை.

நான்காவது, இவ்நாடுகள் அனைத்தும் 3ஆம் உலக நாடுகளாக இருப்பவையாகும். இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி 9வீதம் வரை உயர்ந்துள்ளபோதும் அடிநில மக்களால் அதன்பயன்பாட்டை பெறமுடியவில்லை இப்பின்தங்கிய பொருளாதாரநிலை கூட்டுப் பொருளாதார முயற்சிகளை வளர்ப்பதில் பாரிய தடைகளை உருவாக்குகின்றது.

ஐந்தாவது, உலகமயமாக்கல் பொருளாதாரத்தின் வளர்ச்சியினால் மேற்குலகத்தில் தங்கி வாழவேண்டிய நிலைக்கு இந்நாடுகள் தள்ளப்பட்டுள்ளமையாகும். இந்நிலை சுய பொருளாதார வளர்ச்சியினை தடுத்துவிடுகின்றது.

எனவே, சார்க் நாடுகள் இக்குறைபாடுகளை களைவதற்கான வழிகளைக் கண்டறிய வேண்டும். இதன் பின்னர்தான் சீரான திசை நோக்கி சார்க் அமைப்பின் முன்னேற்றத்தினை எதிர் பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீட்டுத் திட்டத்தால் வீட்டை இழந்தவர்கள்




யாழ்குடாநாட்டில் மிகவேகமான முறையில் அபிவிருத்தித்திட்டம் என்ற அடிப்படையில் பல்வேறு விதமான கட்டிட அபிவிருத்திகள், வீட்டுத்திட்டங்கள் என பரவலாக அதிகமானஅளவில் பல்வேறுபட்ட உதவி நிறுவனங்கள், அரச திணைக்களங்கள் என்று எல்லாவகையான வழிகளுக்கூடாகவும் நடைபெற்று வருகின்றது. இதில்பல்வேறு குறைபாடுகள் முறைகேடுகள் நிலத்தைப்பயன்படுத்துவதில் தவறான போக்குகள் துஸ்பிரயோகங்கள் என்பன நிறையவே இருந்தாலும். பயனாளிகள் என்றவகையில் மக்கள் முழுமையான பயன்பாட்டை அடைகிறார்களா? என்ற விடையத்தை மட்டும் இந்த சிறு தொகுப்பில் பார்ப்போம்.

மக்களுக்கான வீட்டுத்திட்டம் என்ற வகையில் குறிப்பிட்ட சில நிறுவனங்கள் தாமே வீட்டைக்கட்டி முடித்தபின் உரிமையாளர்களிடம் வீட்டை ஒப்படைக்கின்றனர். இதனால் பயனாளிகளுக்கும் அது பயனுடையதாக அமைகின்றது. இன்னும் சில நிறுவனங்களும் அரசதிணைக்களங்களும் மக்களின் பங்களிப்புடன் வீட்டைக்கட்டுவது அதாவது கொடுக்கப்படும் நிதியுடன் தமது பங்களிப்பையும் சேர்த்து வீட்டை அமைப்பது இது முழுமையாக வெற்றியளித்ததாக தெரியவில்லை இன்னொன்று வீட்டைக்கட்டுவதற்கான முழுமையான நிதியையும் வழங்கும் முறை ஆனால் வீட்டை பயனாளிகளே பொறுப்பெடுத்து முடிக்கவேண்டும் இதுவும் குறிப்பிட்டு சொல்லக்கூடிய சிலரால்மட்டுமே இத்திட்டத்தை பூரணமாக நிறைவு செய்யமுடிகின்றது. கடைசியாகக் குறிப்பிட்ட இருவகையான வீட்டுத்திட்டமானது மூன்று விதமான மக்கள் பிரிவினருக்கு சென்றடைகின்றது. ஒன்று தமது சொந்தப்பணத்தை யும் திட்டத்தின் மூலம் கிடைக்கும் நிதியையும் சேர்த்து தாம்விரும்பிய அளவில் வீட்டைக் கட்டிமுடிக்கும் வளத்தைக் கொண்டவர்கள் இரண்டாமவர்கள் தமது கையில் இருக்ககக்கூடிய சிறு வளத்தைப்பயன்படுத்தி கடனாக மாறியும் தமது இயல்புக்கேற்ப திட்டத்தின் அளவுப்பிரமாணத்திற்கமைய வீட்டைக்கட்டி முடித்தும் முடியாத நிலையிலும் வைத்திருப்பவர்கள். மூன்றாவது பிரிவினர்கள் அடிப்படையில் எந்தப்பொருளாதார வசதியுமற்றறவர்கள். நிலத்தை மட்டுமே உரித்துடையவர்கள் இவர்களில் பெரும்பாலனவர்களது நிலங்கள் அரசகாணியாகவே உள்ளது.

இந்த இரண்டாமவர்களின் நிலையை உடையவர்கள் கவலைக்குரியவர்கள். மூன்றாமவர்கள் பரிதாபத்திற்குரியவர்களாக உள்ளனர். இரண்டாமவர்கள் தமது நிலத்தில் ஏற்கனவே இருந்த வீட்டை பிடுங்கி உதவித்திட்ட வீட்டை அமைத்தாலும் ஓரளவுக்கு கட்டியவீட்டுக்குள் வெயிலுக்கோ மழைக்கோ ஒதுங்கிவாழக்கூடிய சூழலை உருவாக்கமுடிகின்றது. ஆனால்,அந்த மூன்றாமவரைப் பொறுத்தவரையில் இருந்தவீட்டை பிடுங்கிவிட்டு கல்வீட்டில் இருக்கலாம் என்ற நப்பாசையில் பத்தி என்ற அடையாளக்கொட்டில்களை அமைத்துவிட்டு ஏற்கனவே வீடு இருந்த நிலத்தில் உதவித்திட்டத்தில் கிடைத்தவீட்டை அமைக்கவெளிக்கிட்டு இப்போது மழைக்கும் வெயிலுக்கும் படுத்துறங்கவோ ஒதுங்கிக்கொள்ளவோ முடியாமல் உபத்திரப்படுகிறார்கள் ஏற்கனவே இவர்கள் இருந்த வீடுகள் (மண்வீடு அல்லது கொட்டில்கள்) ஓரளவு மழைக்கோ வெயிலுக்கோ ஒதுங்கிவாழக்கூடிய சிறப்பைக்கொண்டிருந்தன இப்போது நின்ற வெள்ளத்தையும் வந்த வெள்ளம் தள்ளிக்கொண்டு போய்விட்டது போல் வீட்டுத்திட்டம் வந்து தமது உள்ள வீட்டையும் இல்லாமல் பண்ணிவிட்டதே என்று வரப்போகும் மழைக்காலத்தை எண்ணி ஏக்கப்பெருமூச்சு விடுகின்றனர்

இவர்களைப்பொறுத்தமட்டில் அடிப்படைப் பொருளாதார வசதியோ அல்லது வேறுவகையில் கடன்படவோ முடியாதவர்கள் அதனால் வீட்டுத்திட்டத்தில் முழுமையாக பயன்பாட்டை அடைமுடியாத துர்ப்பாக்கிய நிலையில் காணப்படுகின்றனர் இவ்வாறானவர்களுக்கு உதவி வழங்குபவர்கள் அல்லது அரசதிணைக்களங்கள் தாமே பொறுப்பெடுத்துக் கட்டிமுடித்து வீட்டைஒப்படைக்கும் திட்டத்தின் கீழ் அபிவிருத்தியை முன்னெடுத்தால் வரவேற்கத்தக்கதாக இருக்கும் இதுகுறித்துச்சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் அதிகாரிகள் சிந்தித்து முடிவெடுத்தால் அந்த மூன்றாவது பிரிவினராகிய வறிய மக்களுக்கு பேருதவியாக இருக்கும்.

இது எல்லாவற்றிற்கும் மேலாக தற்போதைய சீமேந்தின் அதிஉச்சமான விலை ஏற்றமும் தட்டுப்பாடும் அனைத்துப்பயனாளிகளினது வீடுகளும் அரைகுறையிலிருக்கின்ற ஒரு நிலையை ஏற்படுத்திவிட்டுள்ளது அரசாங்க அதிபர் இரண்டு தடவைகள் 1500ரூபா விலைக்கு மேல் விற்றால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்த போதிலும் சீமேந்தின் விலை குறையவில்லை தற்போது மூன்றாவது நடவடிக்கையாக 1600 ரூபா விலைக்குமேல் விற்கவேண்டாம் என்று அறிவித்தபின் விலை குறைந்தபாடாகத் தெரியவில்லை. இதனால் பயனாளிகள் அரசாங்க அதிபரின் அறிவித்தல்கூட ஒரு பிரியோசனமில்லாத அறிவித்தல் என்று தமக்குள் பேசிக்கொள்வதை அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில் அபிவிருத்தித்திட்டம் வறிய மக்களையும் பாதிக்கப்பட்ட மக்களையும் சென்றடையப் போவதில்லை இவர்கள் வீட்டுத் திட்டத்தால் வீட்டை இழந்தவர்க ளாகவே இருக்கப்போகிறார்கள் என்பது மட்டும் உண்மையாகும்.




இதயநாம் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வின்போது பிரதிகளை வழங்கியவர்களையும் பெற்றுக்கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org